# தென்மொழி

## என்ன செய்குவது?
## இவர்களைத் தேர்விரே!

என்னருந் தலைவர்கள் இதுவரை மேடையில்
சொன்ன சொற்களில் சோர்வுகள் தோன்றின;
அன்னவர் செயல்களில் அயர்வுகள் தெரிந்தன;
முன்னம் ஈங்கவர் ஆண்ட முறைகளில்
இன்னல் இழிவுகள் எனைப்பல விளங்கின;
பின்னரும் இவர்கள் அப் பிழைகளே செய்யலாம்!
என்னினும் தமிழரே, எதிர்வருந் தேர்தலில்
என்ன செய்குவ திவர்களைத் தேர்விரே!

இன்றைய நாளினில் அரசியல் என்ப(து),ஓர்
ஒன்றித் தனியனின் உழைப்பினில் நடக்குமோ?
அன்றியும் தேர்தலில் அனைவரை வீழ்த்தியே
வென்றி பெறுவதும் சூழ்ச்சியின் றுருகுமோ?
நன்றி கொன்றவர், நடுநிலை பிறழ்ந்தவர்,
என்றும் இருந்திடும் பழியினர், ஆயினும்
ஒன்று கூறுவேன் தமிழ்நல உண்மையால்
தென்றமிழ்த் திரவிடர் தேர்ந்து கொள்வீரே!



சுவடி 16
ஓலை : 4

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
ஓர் உருபா

# நமக்கு வந்த மடல்கள்.

**0:681:** பேரன்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். நெருக்கடிக் காலத்தில் தடை செய்யப் பெற்ற **“தமிழ்நில வரலாறு”** என்னும் தமிழின மெய் வரலாற்று நூலை உடனே வெளியிடுமாறு அ. தி. மு. க. அரசுக்குத் தென்மொழியின் வேண்டுகோளாக ஆசிரியவுரையில் விளக்கி எழுதியிருந்தீர்கள். ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்நூல் வெளியிடப்படவே இல்லை. பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடிக் கொண்டும், உலகத் தமிழ் மாநாடு கூட்டும் ஆரவாரத்தில் மிகுந்தும் தம்மைத் திரவிட வழியினராகவே கூறிக் கொள்ளும் அ. தி. மு. க. அரசினர், உயரிய அவ்வரலாற்று நூலை வெளியிடுவதில் ஏன் தயக்கம் காட்டுகின்றனரென்பதை எங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அதில் அ. தி. மு. கவைப் பற்றிய செய்திகள் ஏதும் கூறப்படாததும் ஒரு கரணியமாக இருக்குமா வென்று எண்ண வேண்டியுள்ளது.

அந்நூலை உடனடியாக வெளியிடப் பெற வேண்டுமென்பதையும், வெளியிடப் பெற்று அனைத்துப் பள்ளி, கல்லூரி, பொது நூலகங்களில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்பதையும் வலியுறுத்தி, தமிழ் நெஞ்சினர் யாவரும் ஆயிரக்கணக்கில் வேண்டுகோள்களாக அரசுக்கு விடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். காலத்தேவை கருதிப் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்குமென்று எச்சரிக்கை விடுக்கவும் வேண்டுகிறேன். —**‘அரிமா’**, மதுரை.

**0:682:** பெரு மதிப்பிற்குரிய ஐயா வணக்கம். தமிழினத்திற்காகக் குரல் கொடுக்கும் தன்மானத் தமிழர் தலைவா!

தங்களைப் போன்றவர்கள் இருக்கும் இந்தத் தமிழ்நாட்டில் தமிழைப் பற்றியும், தமிழினத்தைப் பற்றியும், பார்ப்பனர்கள் துணிவுடன் இழித்தும் பழித்தும் பேசத் தொடங்கி விட்டனர். தந்தை பெரியார் மறைவுக்குப் பின்னர், பார்ப்பனர்கள் ஆர். எசு. எசு. இயக்கம் மூலம் தங்களது வல்லாண்மை நிலையினை மீண்டும் கைப்பற்ற நினைத்துச் செயல்படுகிறார்கள். அண்மையில், தென் மாவட்டங்களில் அதிகமான அளவில் பொதுக் கூட்டங்களும், செயற்கூட்டங்களும் நடத்தி வருகிறார்கள். மதுரை மாநகரில், நடிகர் சோ, நா. பார்த்தசாரதி போன்றவர்களை வைத்துப் பொதுக் கூட்டங்கள் நடத்தித் தந்தை பெரியாரையும், தமிழினத்தையும் இழித்தும் பழித்தும் பேசினர். முத்தமிழ் வளர்த்த மாமதுரையிலா இந்த நிலை! ஐயா, உள்ளம் கொதிக்கிறேன். இதனைத் தட்டிக் கேட்க ஆளில்லை! தமிழர் தலைவர்கள்(!)பலர் வருகிறார்கள், போகிறார்கள். ஆனால், அவர்கள் அரசியல் கூட்டங்களை நடத்தி விட்டு ஒருவரை யொருவர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

**கெஞ்சுவதில்லை பிறர்பால்!**
**அவர் செய் கேட்டினுக்கும்**
**அஞ்சுவதில்லை; மொழியையும்**
**நாட்டையும் ஆளாமல்**
**துஞ்சுவதில்லை'' எனவே**
**தமிழர் தோளெழுந்தால்**
**எஞ்சுவதில்லை உலகில்**
**எவரும் எதிர்நின்றே!**



# தென்மொழி

இலக்கிய இதழ்


**சுவடி: 16 ஓலை : 4.**

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

நளி. தி. பி. உ௰க௰-
நவ-திசம்-1979.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**

ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு;

புரப்பாசிரியர்கள்
**தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)**
**தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)**
**கலைக்கோயில் மாணிக்கப் (சிங்கை)**
**தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)**

**தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.**

**[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்,**
**பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]**




## தெரிந்து தெளிக!

இக்கால், அரசியல் என்பது பெரும்பாலோர்க்கு ஒருவகை வெறுப்பைத் தருகின்ற சொல்லாகவும், அதன் நடவடிக்கைகள் எல்லாம் இகழ்ந்தொதுக்குகின்ற நிகழ்ச்சிகளாகவும் இருந்தாலும், அரசியல் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்னுமளவிற்கு, மக்கள் அரசியல் உணர்வுடையவர்களாக மாற்றப்பட்டு விட்டனர். எவர் ஆண்டால் என்ன, எப்படி ஆண்டால் என்ன என்று நினைக்கும் நிலை போய், 'இவர் ஆண்டால் இன்ன வகையில் மக்களுக்கு நல்லது, இவர் ஆண்டால் இன்ன வகையில் மக்களுக்குத் தீயது' என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற அளவுக்கு மக்கள் மனநிலை வளர்ந்திருக்கின்றது. இஃது ஒரு வகையில் பாராட்டத்தக்க அறிவு வளர்ச்சிதான் என்றாலும், மக்களின் இந்த மன வளர்ச்சியே தடுமாறும் அளவிற்கு—உண்மை எது, பொய் எது என்று விளங்காமல் திகைக்கின்ற அளவுக்கு—இன்று அரசியல் நடவடிக்கைகள்

நடந்து வருகின்றன. உண்ணுகின்ற பொருள், உடுக்கின்ற உடை வகைகள், படிக்கின்ற கல்வி, குடியிருப்பு, கலை, பண்பாடு முதலிய எல்லா வாழ்வியல் உணர்வுகளிலுமே அரசியல் ஊடாட்டம் உள்ள பொழுது, மக்கள் அரசியல் உணர்வுகளின்றி வாழ முடியாத வர்களாகவும், சிந்திக்க முடியாதவர்களாகவும் ஆகி, தங்கள் தங்கள் அறிவுக்கெட்டியவாறும் மனவுணர்வுகளுக்குத் தகுந்தவாறும் எண்ணுகின்றவர்களாகவும், நம்புகின்றவர்களாகவும், ஏமாறுகின்ற வர்களாகவுமே உருவாகி விட்டனர். எனவே, அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஒரு கட்சியுணர்வுடையவர்களாகி, அரசியலில் ஈடுபாடு கொள்கின்றவர்களாகி வருகின்றனர். இந்த நிலையில் மக்களுக்குச் சில தெளிவுகளை உண்டாக்கித் தருவது கற்றறிந்த மக்களின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாகப் போய்விட்டது. அந்தக் கடமை தென்மொழிக்கும் உண்டு. எனவே, வருகின்ற பாராளு மன்றத் தேர்தலைப் பற்றி நாமும் சிந்திக்க வேண்டியவர்களாகப் போய்விட்டோம். நாட்டு நலன் கருதுகிறவர்கள் இத்தகைய தேர்தலை எவ்வகையாலும் புறக்கணித்து விட முடியாது.

தேர்தல், அரசியல் கட்சிகளுக்கு ஒருவகை தேசியத் திருவிழா வாகப் போய்விட்டது என்றே சொல்லலாம். கோடிக்கணக்கான உருபாக்கள் கட்சிகள் சார்பிலும், அரசுச் சார்பிலும் தேர்தலுக்காகச் செலவிடப் பெறுகின்றன. இந்தச் செலவுகள் ஒருவகையில் வீண் செலவுகளே என்றாலும், இது கட்டாயம் செலவழிக்கப்படவேண்டிய செலவாகவே மக்களால் ஒப்புக்கொள்ளப் பெற்று விட்டது. இதில் மிகுதியான பொருள்வளம் உள்ள கட்சிகள்தாம், தங்கள் கொள்கை களைப் (அவை சரியானவையோ, சரியல்லாதவையோ) பரவலாக மக்களிடத்தில் பரப்ப முடியும் வல்லமை பெற்றிருக்கின்றன. பொருள் வளமற்ற ஒரு கட்சிக்கு எத்தனைதாம் சிறந்த கொள்கைகள் இருந்தாலும் அவை பொது மக்களிடத்தில் பரவலாகப் பரப்பப்படும் வாய்ப்பற்றவைகளாக இருந்தால், அவற்றிற்கு எவ்வகை விளைவும் ஏற்படுவதே இல்லை என்று சொல்லிவிடலாம். இந்த நிலைதான் குடியரசு நிலையில் திருத்தப் பெறவேண்டிய தலையாய நிலை. ஆனால் இந்தத் திருத்தம் படிப்படியாகவே நிகழ முடியும். இஃது ஒரு படிநிலை வளர்ச்சியை உள்ளடக்கியதே! பொருள் வளம் உள்ள கட்சிகள்தாம் தம் கொள்கைகளை மக்களிடத்தில் மிகவும் கவர்ச்சிகர மாகவும், வலிவாகவும் எடுத்து வைக்க முடியும். அந்தவகையில் சில அனைத்திந்தியக் கட்சிகள், மாநிலக் கட்சிகளை ஏறி மிதித்து அழித்து விடவும், தம்வயப்படுத்தி விடவும் கூடும்.

பொதுவாக, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பெரிய மாநிலக் கட்சிகளாக உள்ள தி. மு. க.வும், அ. தி. மு. க.வும் தங்களை அழித்துக் கொண்டு, வளர்ந்த தேசியக் கட்சிகளுக்கு ஆதரவு தராமற் போனாலும், அவற்றில் தங்கள் கொள்கைகளை உள்ளடக்கிக்

கொண்டோ, கரைத்துக் கொண்டோதான் வருகின்றபாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிகின்றது. இந்நிலை நாம் விரும்பியோ விரும்பாமலோ நடந்து வருகிறது. இது மாநிலங்களைப் பொறுத்த அளவில் சிற்றரசுகள் பேரரசுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற முடியாட்சி நிலைகளையே நினைவுபடுத்துவதாகும். இந்நிலை ஓர் அவல நிலைதான் எனினும் தவிர்க்க முடியாத ஒரு நிலையாக உருவாகி விட்டது.

தி. மு. க.வும் அ. தி. மு. க வும் தமிழினத்தைப் பொறுத்த மட்டில், சிறப்பாகத் திரவிட இனத்தைப் பொறுத்தமட்டில் ஒரே கட்சியாக மதிக்கப் பெற வேண்டியவை. இன்னும் ஒரே கட்சி யிலிருந்து கால, இட, கருத்துகளின் மாறுபாட்டால் பிரிந்து இரண்டு கட்சிகளாக நிற்பவை. ஆனால் இவை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட உட்பகையான நிலையாலும், ஒன்றையொன்று அழித்துக் கொள்ளும் போட்டி முனைப்பாலும், இன்று, இவை இரண்டும் இரண்டு தனித்த கட்சிகளாகவோ, நேரடியாகவோ தேர்தல் களத்தில் இறங்க முடியாதவையாகப் போய், தங்களுக்கென்று தனித்தனித் துணைகளாக இரண்டு அனைத்திந்தியக் கட்சிகளைத் துணைக்கு அழைக்க வேண்டியுள்ளன. இது தமிழ்நாட்டிற்கு வந்து வாய்த்த ஓர் இழிவு நிலையே ஆகும். இதில் இன்னும் இழிவு என்னவென்றால், அந்த இரண்டு வடநாட்டுக் கட்சிகளும் இம் மாநிலக் கட்சிகளைத் தங்கள் தங்கள் நலன்களுக்காகத் தாமே வந்து பற்றிக் கொள்ளாத நிலையில், திரவிட இன மரபுக் கட்சிகளான இவை இரண்டும் போய், அவற்றைப் பற்றித்தான் தாம் நிலைத்து நிற்கும் வல்லமையைப் பெறவேண்டிய கீழ்நிலைக்கு வந்துவிட்டமைதான். இவ் விரும்பத் தகாத ஒரு நிலையால், திரவிட இன மரபு எங்கு அழிந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற நிலை ஏற்பட்டு விட்டது.

தேசிய நோக்கமுள்ளவையாகத் தங்களை மக்களிடத்து அறி முகப்படுத்திக் கொண்ட தன்மையாலேயே, இத்திரவிட இனமரபுள்ள கட்சிகள் தாங்களாகவே போய்த் தேர்தல் உறவு வைத்துக்கொண்ட இந்திரா கட்சியும், மக்கள் (சனதா) கட்சியும் தகுதியுள்ள கட்சி களாக ஆகி விடா. இரண்டு கட்சிகளுக்கும் உள்ள சில தனித் தகுதிகளைப் போலவே, இரண்டு கட்சிகளிடத்தில் சில தகா நிலை களும், தீய நினைவுகளும் உண்டு. அவை, திரவிட இன மரபு நிலை களையே அழிக்கும் நோக்கம் கொண்டவை. குறிப்பாகத் தி. மு. க. தானே வலியப் போய் பற்றியிருக்கும் இந்திராக் கட்சி, தான் பற்றியதைச் சாம்பலாக்கும் தீயைப் போன்றது. அ. தி. மு. க. பற்றியிருக்கும் மக்கள் கட்சியோ இந்தி வெறியர் களையும், ஆரிய இன மரபையே பேணி வளர்க்கும் நச்சுமனங் கொண்டவர்களையும் கொண்டது. இவ்வறக் கேடான கொடுமை

நிலைகளில் நாம் இன்று கருதத்தக்க முடிவுகள் மூன்று. இவற்றை விரிவாக எடுத்துக் கூற நாம் விரும்பவில்லை. எனினும் கண்களை மூடிக்கொண்டு, கீழ் வரும் மூன்று கருத்து நிலைகளையும் வரும் பாராளுமன்றத் தேர்தலில் தெளிவாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று, திரவிட இன மரபைக் கட்டிக் காக்க—தமிழினத்தை—தமிழ் மொழியைப் பேணிக்கொள்ள விரும்பும் உண்மைத் தமிழர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

**ஒன்று,** தி. மு. க. போட்டியிடும் தொகுதிகளில் தி. மு. க. உறுப்பினர்களையே தேர்ந்தெடுத்தல்.

**இரண்டு,** அ. தி மு. க. போட்டியிடும் தொகுதிகளில் அ. தி. மு. க. உறுப்பினர்களையே தேர்ந்தெடுத்தல்

**மூன்று,** தி. மு. க.வும் அ. தி. மு. க.வும் நேரடியாகப் போட்டியிடும் இடங்களிலோ, அல்லது அவை சார்ந்துள்ள பிற கட்சிகள் போட்டியிடும் இடங்களிலோ, நின்றுள்ள வேட்பாளரில் மிகுதியும் தமிழ்மொழிக்கும், திரவிட இனத்துக்கும் நலம் நாடும் வேட்பாளர்கள் யார் யார் என்று எண்ணித் தேர்ந்து அவர்களையே தெரிவு செய்தல்.

—இம் மூன்று கொள்கைகளையும் **திரவிட மரபு நிலைப் பாட்டுக் கொள்கை** என்று அழுத்தமாக எண்ணிக் கொண்டு, அவைவழிச் செயற்பட்டு, இன்றுள்ள அரசியல் சூழ்ச்சிகளினின்றும், சிக்கல்களினின்றும் நாம் மீண்டு உய்வோமாக.

**தன் துணை இன்றால் பகையிரண்டால் தான் ஒருவன்**
**இன் துணையாக் கொள்கவற்றின் ஒன்று.**

**தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்.**

—பெருஞ்சித்திரன்

**குறிப்பு:** இவ் வாசிரியவுரையை, ஆங்காங்குள்ள தென்மொழி அன்பர்கள், அறிக்கைகளாக அச்சிட்டுப் பொதுமக்களிடையே பரப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## பெருந்துயரச் செய்தி

எம் அருமைத் தந்தையார், **திரு. இரா. துரைசாமி** அவர்கள், எதிர்பாராத வகையில் கடந்த **5-12-79** அன்று சேலத்தில் இயற்கை எய்தினார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெருஞ்சித்திரன்.**

# திருக்குறளுக்கு நேர்ந்த அவமதிப்பும் இயக்குநர் அருணாசலத்தின் பணிவிடுப்பும்

'தமிழ், சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனம்' என்றொரு நிறுவனம் சென்னையில் உள்ளது. இந் நிறுவனம் தமிழக முன்னாள் ஆளுநர் **கே. கே. சா.** வால் தொடங்கப் பெற்றது. இதன் இயக்குநராக **பர். மு. அருணாசலம்** அவர்கள் இருந்து வந்தார். இவ்வாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாகத்தான், 'தமிழ்மொழியே அனைத்து இந்திய மொழிகளுக்குள் தொன்மை வாய்ந்ததும், அம்மொழிகள் அனைத்துக்கும் மூலமானதும் ஆகும். சமசுக்கிருதம் போலும் மொழிகளுக்குக் கூட தமிழ் மிக மிக முந்தியதும் பழைமை வாய்ந்ததும் ஆகும்.' என்னும் கருத்தை முன்னாள் ஆளுநர் **கே. கே. சா.** வெளியிட்டிருந்தார். அந்நடுநிலையான கருத்துக்காக அவர்களைப் பாராட்டித் தென்மொழி அப்பொழுது ஒரு கட்டுரையும் வெளியிட்டிருந்தது. கே. கே. சா.வுக்குப் பின்னர் இயல்பாக ஆளுநர் என்கிற முறையில், **பட்வாரி** அவர்கள் இந்நிறுவனத்திற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று வருகிறார்.

இந்நிறுவனத்தின் இயக்கச் செலவுகளுக்காக நடுவண், மாநில அரசுகள் ஏராளமான தொகை மானியமாகக் கொடுத்துதவுகின்றன. தொல்காப்பிய இடைச் செருகல் பற்றிய ஆய்வு, குமரிக் கண்ட ஆய்வு, ஒப்பியல் அகரமுதலித் தொகுப்பு முதலியவற்றில் இந் நிறுவனம் திட்டங்களை வகுத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் கே. கே. சா. இருந்தவரை ஓரளவு நன்கு செயல் பட்டது. அதன் பின்னர் அஃதாவது பட்வாரி அவர்கள் இதன் தலைவராக வந்து பின்னர், இதன் இயக்கம் பெரும்பாலும் தடை செய்யப் பெற்றதென்றே சொல்லாம். இதன் செயல் திட்டங்களைக் காட்டி உதவி பெற்றிருக்கும் இந்நிறுவனத்தில் தலைவர் (அஃதாவது இப்பொழுதுள்ள ஆளுநர்) இதுவரை எந்தப் பணியும் செய்யவில்லை. ஆராய்ச்சிக்கு வேண்டிய அறிஞர்களை, இயக்குநர் அமர்த்தக் கேட்டும் அமர்த்தவில்லை. நிறுவனத்தின் ஆராய்ச்சித் தொகுதிகள் மூன்று அச்சுக்கு அணியமாக இருந்தும் அச்சிட ஓர் ஏற்படும் செய்யப் பெற வில்லை. பெரும்பாலும் ஆரியப் பார்ப்பனர்களுக்கு—அல்லது சமசுக் கிருதத்திற்கு ஏற்றம் தராத எந்தப் பணியும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இவ்வாறே முடக்கப்படும் என்பது இங்குள்ள வரலாறு. அதுபோலவே தொடக்கத்திலேயே, அஃதாவது கே. கே. சா. அவர்கள் ஆளுநராக இருந்த பொழுதே, சமசுக் கிருதத்தை விட அவர் தமிழை உயர்த்திப் பேசியதை யொட்டியே இந்நிறுவனத்தைப் பார்ப்பனர்கள் ஆதரிக்காத போக்கு ஒன்று

இருந்தது. ஆனால், கே. கே. சா.வுக்கும் பின்னர், இந்நிறுவனத்தையே அவர்கள் தங்கள் சார்பாக இயக்கத் தொடங்கி விட்டனர்.

**சிரீராமதேசிகன்** என்பவர் இந்நிறுவனத்தின் செயலாளர் என்ற பெயரில் மாதம் 300 உருபா உதவித் தொகையாகப் பெற்று வந்தார். நிறுவனத்தின் பொருள்நிலை முட்டுப்பாட்டால் இத் தொகை சிறிது குறைத்துக் கொடுக்கப் பெற்றது. ஆனால் பட்வாரி ஆளுநராக வந்தவுடன் மீண்டும் அத்தொகை உயர்த்தப் பெற்றது. மேலும் ஆட்சிக் குழுவினர் நிறுவனத்தில் ஊதியம் பெறக் கூடாது என்பது நெறி. இந்நெறி முறைக்கு மாறுகவே தேசிகனுக்கு உதவித் தொகை, மாதச் சம்பளமாகவே மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பெற்றது.

இனி, இதைவிடக் கேடான செயல் ஒன்று அண்மையில் நடந்துள்ளது. இந்த நிறுவனச் செயலாளர் சிரீராம தேசிகன் தம் சமசுக்கிருத அறிவைப் பயன்படுத்தி, திருக்குறளைச் சமசுக்கிருதத்தில் மொழி பெயர்த்தார். அதை இந்நிறுவனத்தின் பெயரிலும், பணத்திலும் வெளியிட்டுக் கொள்ள விரும்பியுள்ளார். அதன் பொருட்டு ஆளுநர் பட்வாரி அவர்களைப் பிடித்து, அவருதவியால் அச்சிட்டு நூலாக்கினர். அண்மையில் இங்கு வந்த **மொரார்சி தேசாயைப்** பிடித்து, ஆளுநர் மாளிகையிலேயே இந்நூலை வெளியிட்டும் கொண்டார். இதில் வியப்பு என்னவென்ருல் இப்படி ஒரு நூல் எழுதப் பெற்றது, இதனை இந்நிறுவனம் வெளியீட்டுக்காக ஏற்றுக்கொண்டது, மீண்டும் இதனை அச்சிட்டு வெளியிட்டது போன்ற எந்தச் செயலுமே இதன் இயக்குநராகிய பர். **மு. அருணுசலம்** அவர்களுக்குத் தெரியாது என்பதுதான்! எப்படி! பார்ப்பனர்கள் தாங்கள் நினைத்த எந்தச் செயலையும் எப்படியாவது எவரைக் ,கொண்டேனும் செய்து விடுவர் என்பதற்கும் அவர்கள் நலன்களுக்குச் சார்பாக இல்லாதது எதையுமே எப்படியோ தடுத்தோ முடக்கியோ அழித்தோ விடுவர் என்பதற்கும் இது தலையாய எடுத்துக்காட்டு.

இது பற்றி இயக்குநர் பர். மு. அருணுசலம் தம் அறிக்கையில், 'இந்த வெளியீட்டைத் தமிழ் இயக்குநராகிய நான் பார்த்தபோது நிறுவனத்தைக் கலந்து கொள்ளாமல் அதன் பெயரில் வெளியிட்டது தவறு என்று மறுத்தேன். இந்நூலால் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் திருக்குறளுக்கும் பெருத்த இரண்டகம் நேர்ந்து விட்டது என்பதைச் சுட்டிக் காட்டினேன். இதற்கு ஆட்சிக் குழுத் தலைவர் (ஆளுநர்) தக்க தீர்வு காண வேண்டும் என்று கடிதத்தின்

மூலம் தெரிவித்தேன். ஆனால் ஒன்றுமே செய்யப் பெறவில்லை' என்று வருந்தியிருக்கிறார். இனி, இந்நிலைகள் எல்லாவற்றையும் விடப் பெரிதும் வருந்தத் தகுந்த-கண்டிக்கத் தகுந்த—செய்தி ஒன்று உளது. அதுதான் இந்த நூலுக்குத் தரப்பெற்ற தலைப்பு. அஃது இது. **'எசு. என். சிரீராம தேசிகனின் சமசுக்கிருத திருக்குறள்—தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளோடு!** (**Sanscrit Thirukkural of S. N. Sriramadisigan with Tamil and English Translations**) இதில் தமிழ் மொழிபெயர்ப்பாகத் திருக்குறளின் மூலம் அச்சிடப் பெற்றுளதோ இன்னும் கொடுமை! மூல நூல் **சிரீராம தேசிகன்** வடமொழியில் எழுதினார் என்றும், அதைத் திருவள்ளுவர் தமிழில் மொழி பெயர்த்தார் என்றும் தோன்றும்படி பொத்தகத்தின் தலைப்பு உள்ளது. அதில் முதலில் தேசிகனின் சமசுக்கிருத குறளும், பிறகு திருவள்ளுவரின் திருக்குறளும், மூன்றாவதாகத் தேசிகனின் ஆங்கில மொழி பெயர்ப்பும் அமைந்துள்ளன. அன்பர்கள் இவ்விடத்தில் ஒன்றை நன்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். வேத காலம் முதல் இடைக்காலம் வரை, மக்களிடம் நன்கு பரவாத நிலையில் இருந்த அறவியல், அறிவியல், கலை, பண்பாட்டுத் தொடர்பான நூற்றுக்கணக்கான அரிய தமிழ் நூல்கள் அனைத்தும் இவ்வகையில்தாம் சமசுக்கிருதத்தில் மொழி பெயர்க்கப் பெற்றுச் சமசுக்கிருத மூல நூல்கள் போலவே பிற்காலத்தில் காட்டப் பெற்றன. இந்த முயற்சிகள் மறுக்க முடியாத உண்மை என்பதற்கும் இவை இன்றும் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதற்கும், இன்று தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய நடவடிக்கைகளும், சிரீராம தேசிகனின் இத் திருக்குறள் வெளியீடுமே சிறந்த சான்றுகளாக உள்ளன என்பதைத் தெரிந்து தெளிந்து கொள்ளல் வேண்டும். இனி, இப்படிப்பட்ட முறையில் இத் திருக்குறள் நூல் வெளிவருவதை விரும்பாத இயக்குநர் பர். மு. அருணாசலம் அவர்கள் ஆளுநரிடம் நேரிலும் மடல் வழியும் தம் மறுப்பை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அம் முறையீடு கேட்கப் பெறாமல், தமிழ்க்கும் திருக்குறளுக்கும் இரண்டகம் என்னும்படி இந்நூல் வெளிவந்தே விட்டது. எனவே மனம் நொந்து, இந்நிறுவனத்தின் இயக்குநர் பர். மு. அருணாசலம் அவர்கள் இந்நிலைகளைக் கண்டிக்கும் வகையில் தம் அரிய பதவியை விடுப்புச் செய்துள்ளார். (அவ்வாறு பதவி விடுப்புச் செய்திருக்க வேண்டியதில்லை. அது நமக்குத்தான் இழப்பு.)

இவரின் பதவி விடுப்புப் பற்றிப் பார்ப்பனரில் எவருமோ ஆளுநரோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஏனெனில், இந்நிலை அவர்களுக்கு இன்னும் நல்லதாகப் போயிருக்கும். ஆனால், இது பற்றித் தமிழரில், தமிழ்த் தலைவர்களில் கூட எவரும் கவலைப்பட்டதாகவோ படுவதாகவோ தெரியவில்லையே, ஏன்? o

வகைத்தான உலக நாகரிகத்தின் இவ்விழிந்த போக்கினை என்ன வென்று எடுத்துரைப்போம்!

**விரிப்பு :** இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

கல்விக் கழகத்துப் பயிலும் ஆண்மகன் ஒருவன், தன்னை ஒரு பெண்ணைப் போல் புனைவு செய்து கொண்டு புறம் வந்ததையும், அவன் தன் இளமைக்குரிய வாலை நிலைகள் திரிந்து, முதுமை நிலைக் குரிய தன்மைகளைப் பெற்றிருந்ததையும் நன்கு புலப்படுத்துவான் வேண்டிக் கூறியதாகும் இப்பாடல்.

கல்வி பயிலும் இளைஞர் தம் ஆண் தன்மைக்குரிய வகையில் ஒப்பனை செய்து கொள்ளாமல், பெண்ணியல்புக்கான வகையில் தம்மைப் பலவாறு தோற்ற உடைகளால் சுவடித்துக் கொள்ளும் இழிநிலை இயல்புகளைப் பகடி செய்ததாகும் இது.

நாகரிகம் என்னும் பெயரால் இளைஞர் தம் நடைமுறைகளால் சீரழிவுற்றுச் சிதைந்து வருவதைக் கண்டித்ததும் ஆகும் இது.

இளைஞன் ஒருவன் பெண் போலும் முகமா பூசி, பெண்கள் அணியும் பூவண்ணத் துணிகளில் உடையுடுத்துப் பெண்ணென மயங்குமாறு நீள் முடி வளர்த்து, பல்வேறு எண்ணத் திரிபுகளால் தன் இளமை நழுவ முதுமைச் சாயலுற்றுத் தோன்றினன் அவனைப் பெண்ணென மயங்கி, 'அம்ம, நீ வாழ்க; விரைவில் திருமணமும் பெறுக' என வாழ்த்தியும், அவன் அதற்கு நாணுறுமல், 'நீவிர் கண்ணொளி கெட்டீர் போலும்; நான் பெண்ணல்லன்; ஆணே யாகும்' என வெகுண்டுரைத்தான் அது கேட்டு, 'இவ்வுலகின் இழிநிலைப் போக்கு என்னே!' என்று வருந்தியுரைக்கின்றதாக அமைந்ததிப் பாடல்.

**அம்ம, வாழியோ :** அம்மா, நீ வாழ்வாயாக.

**மன்றல் ஆகுமதி :** திருமணம் ஆகுமாக. பெண்போலும் தோற்றமுற்றறிருந்த அவனை, அவள் என்றெண்ணி, நல்லெண்ணத் தால் வாழ்த்துவர். **மன்றல்**-மன்றினில் நடைபெறும் திருமணம்.

மூப்பெதிர் நிற்கும் ஒருத்தி மணவணி காணுது நிற்கின்ருளே என்று வருந்தி, அவளுக்கு விரைவில் திருமணம் ஆகுக என்று வாழ்த்தினுர் என்க.

**மூப்பெதிர் கொளா நின் யாக்கை :** முதுமைக் காலத்தை எதிர் கொளா நின்ற நின் உடல். எதிர் கொளா நிற்றல்-எதிர் கொள்ளல். மூப்புக்காலம் விரைவில் வந்துறுமாறு நின்ற உடல் என்றபடி. உடல் முப்புக் கொள்ளும்படி இருந்தும், இன்னும் திருமணம் கொள்ளாமல் இருக்கின்ருளே என்பதால் கவலுற்றுத் 'திருமணம் கொள்க' என்று வாழ்த்தினுர் என்க.

**யாப்பற:** கட்டுக் குலையும்படி. யாக்கை யாப்பற என்று கூட்டி, உடல் கட்டுக் குலையும்படி என்று பொருள் கொள்க.

**நாட்பூந் தும்பை....சேரலும்:** அன்றை நாள் பூத்த வெள்ளிய தும்பைப் பூவின் நல்ல இதழ்களைப் போலும் நிறத்தின தாய் முடிநரை சேர்ந்திருந்ததும்.

**கட்குழி வாங்கலும்:** கண்கள் குழி வாங்கி உள்ளழுந்தி யிருந்ததும்.

**வடி நரம்பு எழுந்து:** உடலின் கண் வார்ந்த நரம்புகள் பார்க்க இயலுமாறு எழுந்திருந்ததும்.

**மெய்யொளி சுவறலும்:** உடலின் இளமையொளி வறண்டு போய் உடல் பளபளப்பின்றி யிருந்ததும்.

**பிடியொடு நடக்கும் பெற்றியும்:** இயல்பான நிமிர்ந்த நடை இன்றி, எதையாவது பிடித்துக் கொண்டு நடக்கும் தன்மையும்.

**யாங்கு என:** எவ்வாறு ஆகியன என்று கேட்க

**பூவராடை புரள உடுத்தி:** பூக்கள் போலும் ஓவியம் நிறைந்து விளங்கும் ஆடையை மெய் துவளும்படி தளர உடுத்தி;

**முருகின் விரைமா முகப்பட அப்பி:** அழகு செய்யும் மணமுள்ள மாவை முகம் நன்கு புலப்படுமாறு அழுந்தப் பூசி;

**இடக்கை தாழ ஏக்குற நடக்கும்:** இடக்கையைப் பெண்கள் போல் தாழ வீசி, சோர்வுறும்படி நடந்து செல்லும்;

**கல்வி....ஒருத்தியை:** கல்லூரிக் கண் பயிலும் இளம்பெண் ஒருத்தியினை.

**வல்லென....வினவ:** விரைந்து செல்லும் வழியைத் திடுமெனத் தடுத்துக் கொண்டு கேட்க.

**அச் செல்வக் குடி மகள்:** செல்வக் குடியில் பிறந்த அந்தப் பெண்.

**செறித்து நோக்கி:** உறுத்த நோக்கி; உற்றுப் பார்த்து.

செல்வ மிகுதியால் புன்மையும் போலிமையும் சார்ந்த நாகரிகத்தில் படிந்திருந்தாளுகையால், அவ்வினா அவனுக்குச் சினத்தை எழுப்பியது; எழுப்பவே வினவியவரை முறைத்துப் பார்த்தான் என்றபடி.

**கண்ணொளி கழன்றீர் போலும்:** நீவிர் கண்ணொளி அவிந்து போனீர் போலும்.

**ஐய, யான் பெண்பால் அல்லன்:** ஐயா, யான் பெண் பாலினள் அல்லன்; ஆண்பாலனே.

**பிறழக் கொண்டு வினவினிர் :** என்னைப் பெண்பாலாக எண்ணி, இக் கேள்வியை ஆண்பாலான என்னைக் கேட்டீர்.

**என்று வெகுண்டான் :** என்று சினத்துடன் கூறினன்,

**எனவெடுத் துரைப்பல் இவ் விழிநிலை போக்கே! :** ஆணைப் பெண்ணென்று மயங்கும்படியாக உடையுடுப்பதும் புனைந்து கொள்வதுமான இவ் விழிந்த புன்மை நாகரிகப் போக்கினை என்ன வென்று எடுத்துரைப்போம்.

போலி நாகரிகப் பரவலால் நேரும் பாலியல் தோற்ற மாற்றங் களை அளவிட்டு உரைக்க வியலாது. இஃது, அப்புன்மை நாகரிகத் தால் உருவாகும் இழிவு நிலைகளுள் ஒன்று என்பதாக, என்னவென்று எடுத்துரைப்போம்' என்னும் தொடருக்குப் பொருள் கொள்க.

இது **பொதுவியல்** என் திணையும், **இயனிலை திரிதல்** என்னும் துறையுமென்க. இயற்கை நிலை திரிந்த தன்மைகளை எடுத்துக் கூறலின் இயனிலை திரிதல் என்னும் புதுத்துறை வேண்டுவதாயிற்று.

---

# தேவை

**தென்மொழி** அலுவலகத்திற்கு **மேலாளர்** ஒருவரும் கணக்குகள் தெரிந்த **எழுத்தர்** ஒருவரும் உடனடியாகத் தேவைப் படுகின்றனர். மேலாளர் குறைந்தது **கலைஇளவல் (B. A.)** பட்டமும், எழுத்தர் குறைந்தது **புகுமுகமும் (P U. C.)** தேறி யிருத்தல் வேண்டும். அத்துடன் நல்ல தமிழ், ஆங்கில அறிவும், தமிழ்மொழிப் பற்றும், சுறுசுறுப்பும், வினை ஊக்கமும் கொண்டவர் களாக இருத்தல் வேண்டும். ஒப்வு பெற்ற தமிழாசிரியர் வரவேற்கப் பெறுவர். இருவர்க்கும் அச்சுத்துறை யறிவு சிறப்புத் தகுதியாகக் கொள்ளப் பெறும். தேர்ந்தெடுக்கப் பெறுபவர்கள் முறையே உகுபா 500/-உம், உருபா 300/-உம் பொறுப்புத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும். விரும்புகிறவர்கள் தாங்கள் விரும்பும் குறைந்த அளவு சம்பளத்தைத் தெரிவித்து 1-12-79-க்குள் மடல் வழித் தெரிவிக்கவும்.

அமைச்சர்,
**தென்மொழி.**

# என் இலங்கைச் செலவு

**பெருஞ்சித்திரனார்.**

## 14. இரண்டாம் நாள் மாநாட்டு நிகழ்ச்சி

மறுநாள் (21-5-78) ஞாயிற்றுக்கிழமை காலைச் சிற்றுண்டிக்குப் பின் முன்னைய நாள் மாநாட்டுக்கு வந்து என் சொற்பொழிவைக் கேட்ட அன்பர்கள் சிலர் கா. பொ. இ. வீடு வந்து என்னைக் கண்டு பாராட்டுத் தெரிவித்தனர். அன்றைய மாநாட்டு நிகழ்ச்சிகள் பிற்பகல் 3 மணியளவிலேயே தொடங்க விருந்ததால், நாங்கள் பகலுணவுக்குப் பின் 2 மணியளவிலேயே மாநாட்டுத் திடலை அடைந்தோம். அன்று காலை 10 மணியளவில் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக மாணவர் பேச்சுப் போட்டி ஒன்று நடந்தது. நிகழ்ச்சிக்கு நெடுந்தீவு அரசு உதவிச் செயலர் திரு. **ஆ. செந்தில்வடிவேல** தலைமை தாங்கியிருந்தார். திரு. **செ. ப சிவராசு** அவர்கள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர்.

அடுத்து, பிற்பகல் 3 மணியளவில் **சுதந்திரன்** ஆசிரியர் திரு. **[1]காவை மகேசன்** அவர்கள் நடுவராக அமைய, **திருக்குறள் சமய நூல்** என்னுந் தலைப்பில் வழக்குரை மன்றம் ஒன்று நடந்தது. அது **சமய நூல்** என்னும் கருத்தில், வட்டாரக் கல்வி அலுவலர் பண்டிதர் திரு. **பொன். கணேசன்** அவர்களும், புலவர் திரு. **க சிவானந்தன்** அவர்களும், திரு **ஈழவேந்தன்** அவர்களும் திறம்பட வழக்காடினர். அது சமய நூல் அன்று, **அறநெறி இலக்கியமே** என்னும் கருத்தில், மற்றொரு வட்டாரக் கல்வி அலுவலர் பண்டிதர் திரு. **க குருநாதன்** அவர்களும், புலவர் திரு. **நா. சிவபாதசுந்தரன்** அவர்களும், வித்துவான் திரு. **க. சொக்கலிங்கம்** அவர்களும் நல்ல சான்றுகள் காட்டித் தம் கருத்தை வலியுறுத்திப் பேசினர். நடுவர் தம் தீர்ப்புரையில் இரு தரப்பினரும் பேசிய கருத்துகளில் பொருந்துவனவற்றையும் பொருந்தாதனவற்றையும் எடுத்து விளக்கி **திருக்குறள் ஓர் அறநெறி இலக்கியமே** என்று தீர்ப்பளித்தார்

அதன் பின் மாலை 6-30 மணியளவில் விரிவுரைகள் தொடங்கின: இன்றைய நிகழ்ச்சிக்கு, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் தலைவர் பர். **சு. வித்தியானந்தம்** தலைமை தாங்கியிருந்தார்.: இன்றைய நிகழ்ச்சியில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விரிவுரை

---

[1] முன்னைய கட்டுரையில், முதல் நாள் நிகழ்ச்சிக்கு இவர் தலைமை தாங்கியிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தது, கவனக் குறைவால் நேர்ந்தது. மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிக்குத் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் **கா. பொ. இரத்தினம்** அவர்களே தலைமையேற்றிருந்தார்.

யாளர் திரு. **நா. சுப்பிரமணியம்** அவர்கள் “வல்லாரார் வள்ளுவரல்லால்” என்னுந் தலைப்பிலும், யாழ்ப்பாணம் தொழில் துறைத் தலைவர் திரு **வை. சுவாமிநாதன்** அவர்கள் ‘வள்ளுவரும் இளங்கோவும்’ என்னுந் தலைப்பிலும், திரு. **சி மௌனகுரு** ‘வள்ளுவர் காலமும் கருத்தும் என்னுந் தலைப்பிலும், **செந்தமிழர் இயக்கச்** செயலர் திரு. **வ. பொன்னம்பலம்** அவர்கள் ‘வள்ளுவரும் பொதுவுடைமையும்’ என்னுந் தலைப்பிலும் சிறப்புறச் சொற்பொழிவாற்றினர்.

திரு. **வ பொன்னம்பலம்** அவர்கள் பொதுவுடைமைக் கட்சியினர். பிறர் எவரையும் அவ்வளவு எளிதாக மதிக்காதவர் போல மேடையில் அவருடை வீற்றிருக்கை அமைந்திருந்தது. பொதுவாகவே பொதுவுடைமைக் கொள்கையினரிடம் இவ்வுணர்வு மிகுந்திருப்பதை நான் நம் நாட்டுத் தலைவர்களிடமும் தொண்டர்களிடமும் கண்டிருக்கின்றேன். பொதுவுடைமைக் கொள்கையினை **முழுமையாக** ஒப்புக்கொள்ளாதவரையோ, அறியாதவர்களையோ, அல்லது ஓரளவு ஒப்புக்கொள்பவரையோ அக்கட்சியினர் மதிப்பதே இல்லை. ஏதோ அவர்களிடம் வேண்டா வெறுப்பாகவே பழகுவர். மற்றவர்களுடைய கருத்துகளை அவர்கள் கேட்டுக்கொள்வதே இல்லை. கேட்டாலும் ஒரு புறக்கணிப்பு உணர்வுடனேயே கேட்பதைப் பார்த்திருக்கின்றேன். இன்னுஞ் சொன்னால் அவர்களில் சிலர் பிறரை அறிவுடையவராகவே மதிப்பதில்லை. நம் நாட்டில், பகுத்தறிவாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களிடத்திலும் இந்தக் குறைபாடு உண்டு. கடவுளை நம்புகிறவர் என்றால், அவர் எந்தத் துறையில் எவ்வளவு பெரிய அறிவு வாய்ந்தவராக இருந்தாலும், அவர்கள் அவரை அறிவுள்ளவராக எண்ணுவதில்லை; மதிப்பதும் இல்லை. வெறும் தொன்ம (புராணக்) கட்டுக் கதைகளையும், வரலாற்றுப் புனைவு (இதிகாசங்)களையும் படித்தோ அல்லது கேட்டோ அறிந்த மட்டிலேயே அவர்கள் மெய்ப்பொருளுண்மைகள் அனைத்தையும், உலக, மாந்த, உயிரின அறிவியல் கோட்பாடுகளையும் பழுதறத் தெரிந்து கொண்டது போன்ற ஒருவகை மனச் செருக்கு அவர்களிடம் ஏற்பட்டு விடுகின்றது. அத்துடன் அவர்களிடம் பழகினால் அவர்களுடைய அறிவுச் செருக்கையும், அவர்களது காரறிவாண்மையையும் நன்கு உணர முடியும். அவர்களைக் குறை கூறுவதற்காக இதை இங்குக் குறிப்பிடவில்லை. அவர்கள் தங்களைப் பற்றிய இந்நிலைகளைத் தெரிந்து, திருத்திக் கொண்டு, அந்தந்தத் துறையில் அறிவுள்ளவர்களை அந்தந்த வகையில் மதிக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதற்காகவே இதனை அன்புடன் குறிப்பிடுகின்றேன்.

இதற்கொப்பவே, அன்றைய மாநாட்டில் பொதுவுடைமை உணர்வினரான திரு. **வ. பொன்னம்பலம்** மேடையில் அமர்ந்திருந்தார். பார்த்த அளவிலேயே அவர் முகத்தில் ஒரு கடுகடுப்பு

தெரிந்தது. அவரைப் பற்றி அருகிலிருந்த பண்டிதர் அவர்களிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பொதுவுடைமைக் கட்சியிலிருந்த அவர், அக்கட்சி இலங்கையில் உள்ள தமிழ்த் தேசிய இன விடுதலையைப் பற்றிக் கவலைப்படாமலும் கருத்தறிவிக்காமலும், விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு தராமலும் இருக்கும் நிலைகளை உணர்ந்து, தமிழ்த் தேசிய இன விடுதலையைக் கொள்கை யளவில் விரும்பும் பொதுவுடைமை உணர்வுள்ள இளைஞர்களை யெல்லாம் மூலப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வேறுபடுத்தி, அவர்களைக் கொண்டு, **'செந்தமிழர் இயக்கம்'** என்றோர் இயக்கத்தை அவர் தொடங்கி நடத்துவதாக அறிந்தேன்.

மேடையில் அமர்ந்திருந்த அவரைச் சிலபொழுது அரைக் கண்ணால் பார்த்தேன். அவரும் என்னை அடிக்கடி முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இறுதியில் அவர் பேச்சு நிகழ்ந்தது. எடுப்பான குரலில், தெளிவான கருத்துகளை மக்கள் மனங்கொள்ளும் வண்ணம் மிக அழகுறப் பேசி முடித்தார். அந்தப் பேச்சைக் கேட்டதும் அவர் தமிழின மக்கள் மேல், குறிப்பாகத் தமிழின அடிநிலைத் தொழிலாளர் மேல், அவர்களின் முன்னேற்றத்தின் மேல் வைத்த அன்பும் அக்கறையும் நன்கு புலப்பட்டன. அவர் திருக்குறள் கருத்துகளை உயர்வாகவே மதித்துப் பேசினார். பொதுவாகவே, பொதுவுடைமைக் கொள்கையினர் சிலரும், பகுத்தறிவாளர்கள் என்போரில் பலரும் திருக்குறளை அவ்வளவாக —அஃதாவது தங்கள் கட்சி மூலவர்களாகிய மார்க்சையும், பெரியாரையும் மதிக்கின்ற அளவுக்கு —மதிப்பதும் இல்லை; போற்றுவதும் இல்லை. இன்னும் சொன்னால் அந்த நூலை முழுமையாகப் படிப்பதும் இல்லை. வெறும் மேலோட்டமாகவோ, நுனிப்புல் மேய்வது போலவோ படித்தவுடன், 'அதில் என்ன அவ்வளவு இருக்கிறது?' என்று கேட்கத் தொடங்கி விடுகின்றனர். அதை ஆழமாக, மார்க்சியக் கொள்கை நூல்களையும், பெரியாரின் கருத்துரைகளையும் படிக்கும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இக்கட்சியினர் படிப்பதில்லை. ஏதோ, "எல்லாரும் சொல்கிறார்களே, உலகப் பேரறிஞர்கள் எல்லாரும் மதிக்கிறார்களே, தமிழனுக்கென்று வாய்த்த நூல்களில் தலையாய நூல் என்று போற்றுகின்றார்களே, அதை நாம் படித்ததில்லை என்று சொன்னாலோ, ஓரளவு வெளிப்படையாகப் பாராட்டாமல் போனாலோ, நம் அறிவைப் பற்றியோ, நாம் தமிழினத்தவன்தான் என்பது பற்றியோ எவராகிலும் தவறாக மதிப்பிட்டு விடுவார்களே"—என்பதற்காகவே திருக்குறளை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கற்றுவிட்டு, அல்லது மேலோட்டமாக ஆய்ந்துவிட்டு, 'இதிலுள்ள சில கருத்துகள் (எல்லாக் கருத்துகளும் என்று அவர்கள் சொல்வதில்லை. அப்படிச் சொன்னால், அதைச் சரியாகப் படிக்கவில்லை என்பதாகப் பிறர் தம்மை எளிதாக மதிப்பிடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்று அவர்களுக்குத் தெரியும்.) இக்காலத்

திற்கு ஒப்பவில்லை.' என்று ஆரவாரப் படுத்திப் பேசத் தொடங்கி விடுகிறுர்கள்.

ஆனுல் இலங்கை, செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு வ. பொன்னம்பலம் அவர்கள் அந்த வகையில் பேசாமல், திருக்குறளின் பொதுவுடைமைக் கருத்துகள் எப்படி மார்க்சியத்திற்கு வேறுபடாமல் இருக்கிறது என்று சான்றுகள் காட்டி வலியுறுத்திக் கூறியதுடன், உலகின் மிகப் பெரும் சிந்தனையாளர்களின் கருத்துகள் எவ்வாறு ஒரே வகையினவாக வெளிப்படுத்தப் பெறுகின்றன என்று வியப்புடன் விளக்கியும் பேசினுர். அவருடைய பேச்சுக்குப் பின் உண்மையிலேயே அவர் மேல் எனக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. அவரைக் கூட்ட முடிவில் பாராட்ட வேண்டும் என்று கூட நினைத்துக் கொண்டேன்.

அடுத்து என் பேச்சு நிகழ்ந்தது. என் பேச்சை அவருடைய கருத்துகளை ஒட்டியதாக அமைத்துக் கொண்டதுடன், திருக்குறள் உண்மைகளோடு, தமிழ்மொழியின் அளப்பரிய சிறப்புத் திறனையும் நன்கு எடுத்து விளக்கினேன். அந்தப் பேச்சு அவர் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும். அதனுல் அவர் உணர்வும் ஊக்கமும் தமிழ் மொழி பற்றி உயரறிவும் பெற்றிருக்க வேண்டும். அதனை, என் பேச்சு முடிவுற்றதும் அவர் முகமலர்ச்சியுடனும் ஆர்வத்துடனும் என அருகில் விரைந்து வந்து, என் இரண்டு கைகளையும் பிடித்துக் குலுக்கிப் பாராட்டுத் தெரிவித்த வகையில் உணர்ந்து கொண்டேன். அவரின் கடுகடுத்த முகம் என் பேச்சைக் கேட்டதும் தாமரை மலர் போல் மலர்ச்சியுற்றிருந்தது. (தொடரும்)

## அன்பர்களுக்கு ஓர் அறிக்கை

**தென்மொழி, தமிழ்ச்சிட்டுப்** படிகளுக்குத் தாம் இருக்கும் மாவட்டம் முழுவதும் சுற்றி, ஆங்காங்கு விற்பனை முகவர்களை அமர்த்தவும், உறுப்பினர் கட்டணங்களை நேரில் தண்டவும், வேறு தென்மொழி வெளியீடுகளை விளம்பரப் படுத்தவும் விற்பனை செய்யவும் மாவட்டந்தோறும் அதிகார முழுமையான சுற்று முகவர்களை ஏற்படுத்த விரும்புகிறேம். சுற்று முகவர்களுக்கு அவரவர் ஈட்டத்திற்குத் தக்கபடி கழிவும் வேறு சில சலுகைகளும் தர விரும்புகின்றேம். இப்பணியில் அமர்த்தப் பெறும் முகவர்கள் அவரவர் மாவட்ட அமைப்புக்குத் தகுந்தாற்போல் உருபா 100 முதல் 250 வரை பொறுப்புத் தொகை கட்ட வேண்டியிருக்கும். இப்பணியில் ஈடுபட விருக்கும் அன்பர்கள் தங்கள் புகைப்படத்துடன் (எல்லைக் கடவு அளவில்) 31-12-79-க்குள் அலுவலகத்திற்கு எழுதிக் கேட்க வேண்டுகிறேம். அதற்குப் பின்னர் வரும் வேண்டுகோள்கள் கண்டிப்பாகக் கவனிக்கப்பட மாட்டா.

அமைச்சர். தென்மொழி.

# மலேசியத் தமிழர்

—முரசு. நெடுமாறன்.

**வரலாற்றுப் பின்னணி :**

மலேசியாவுக்கும், தமிழ் இனத்திற்கும் நீண்ட நெடுங்காலத் தொடர்புண்டு. 11-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இராசேந்திர சோழன் கடாரத்தின் மேல் படையெடுத்து வென்ற காலத்தில் முன்பிருந்தே வாணிகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. அன்று 'கடாரம்' என்று வழங்கிய பெயர்தான் இன்று 'கெடா' என்று மருவி வழங்குகிறது. இடப்பெயர்கள் மட்டுமின்றி 'ராசா சூலான்' முதலிய மலாய் மன்னர்களின் பெயர்களும் தமிழர் தொடர்பை உணர்த்தி நிற்கின்றன. மேலும், மலாய்க்காரர்களின் திருமணம் போன்ற சடங்குகளிலும் முடிசூட்டு விழா போன்ற அரசு நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் விளங்குவதை இன்றும் காணலாம். மலாய் மொழியில் விளங்கும் கப்பல் கடை, காவல், குறிஞ்சி, மூக்கா (முகம்) முதலிய ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் நீண்ட நெடுந்தொடர்பை எடுத்தியம்புகின்றன. மலாய்க்காரர்கள் இசை, நடனம் போன்ற கலைத்துறைகளிலும் தமிழின் சாயலைக் காணலாம். "மலேசியாவின் விடுதலைத் தந்தை"யான துங்கு அப்துல் இரகுமான் புத்ரா அவர்களைச் சோழப்பரம்பரையென்று மலேசியத் தமிழர்களின் மூத்தத் தலைவர் **துன் சம்பந்தன்** அவர்கள் குறிப்பிடுவது வழக்கம்.

இராசேந்திர சோழன் காலந் தொட்டு வாணிகத்தை நாடி வந்த தமிழர்கள், மலேசியாவிலேயே தங்கி வாழவும் முற்பட்டனர். மலாய்ப் பெண்களை மணந்து நிலையாகத் தங்கினுர்கள். இவர்கள் காலப் போக்கில் தாய் மொழியை மறந்தார்கள். பழக்க வழக்கம், வழிபாடு முதலியவற்ருல் மட்டும் தமிழர்களாக விளங்கும் இவர்கள் மொழியால்மட்டும் மாறுபடுகிருர்கள். மலாக்காவில் வாழும் இம்மலாய்த் தமிழர்கள் மலாக்கா செட்டிகள்' ஆவார்கள். மொழியை மறந்துவிட்டால் இனத்தின் நிலை என்ருகும் என்பதற்கு இவர்கள் ஓர் எடுத்துக் காட்டு.

**சஞ்சிக் கூலிகள் :**

18-ஆம் நூற்றுண்டில் வெள்ளைக்காரர்களின் குடியாண்மை ஆட்சியில் தமிழர்கள் பெரும் அளவில் குடியேற்றப்பட்டனர். 1833-ஆம் ஆண்டில் குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம் உருவாகும் வரை இலக்கக்கணக்கானவர்கள் மலேசியாவில் வெளியேற்றப்பட்டார்கள். இப்படிக் குடியேற்றப்பட்டவர்களைச் 'சஞ்சிக் கூலிகள்' என இகழ்ச்சியாகக் குறிப்பிட்டனர். இன்று விடுதலை பெற்ற உரிமைமிக்க குடிமக்களான பின்னரும் 'சஞ்சிக் கூலிகள்'

அதாவது 'ஒப்பந்தத் தொழிலாளிகள்' என்ற அடைமொழியைச் சிலர் மறக்காமலிருப்பது மனத்திற்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

குடியாண்மை ஆட்சியில் மலேசியத் தமிழர்களின் வாழ்வு பெரும்பாலும் இழுவை (ரப்பர்)த் தோட்டங்களிலேயே உழன்றது. ஒரு நாளைக்குப் பத்துக்காசு சம்பளத்தில் குருதியை வியர்வை யாக்கினர் தமிழர். வளமான சாலைகளை அமைக்கத் தமிழ்மக்கள் சிந்திய உழைப்புக்கு அளவே இல்லை. மலேசியாவின் வளத்திற்குத் தமிழ் மக்கள் ஆற்றிய பணிகளை வரலாறு மறக்க முடியாது.

## இருண்டகாலம்

குடியாண்மை ஆட்சியை முறியடித்து 1940-இல் சப்பானியர் மலாயாவைக் கைப்பற்றினர். 1945 வரை அவர்களின் கொடுங் கோல் ஆட்சி நடந்தது. அக்கால கட்டத்தில் மக்கள் ஏற்ற துன்பங் களை எழுத்தில் வடிக்க இயலாது. 'சாவு புகைவண்டிப் பாதை' என்று வண்ணிக்கப்படும் தாய்லாந்திற்கும் பர்மாவிற்கும் இடை யிலான புகை வண்டிப்பாதை அமைப்பிற்குத் தமிழர் சிந்திய செந்நீரை நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்; கண்ணீர் பெருகும். சப்பானியரின் கொடுங்கோல் ஆட்சி நடந்த இந்தக் கால கட்டத்தை வரலாற்றுசிரியர்கள் இருண்ட காலம் என்பார்கள். சப்பானியர் களின் ஆட்சி 1945-ஆம் ஆண்டோடு ஒரு முடிவுக்கு வர மீண்டும் வெள்ளையர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

## இளஞாயிறு எழுந்தது

மலேசிய வரலாற்றில் இளஞாயிறு எழுந்த காலம் 1946-ஆம் ஆண்டாகும். இந்த ஆண்டில்தான் குமுகாய உணர்வும் ஒன்றித்துச் செயல்பட வேண்டுமென்ற ஒருமைப்பாட்டுணர்வும் கலை, பண்பாடு களைப் பேண வேண்டுமென்ற முற்போக்குணர்வும் மலேசிய மக்களி டையே ஏற்படத் தொடங்கின. இன்று நாட்டை ஆளும் தேசிய முன்னணியின் முதன்மை வாய்ந்த கட்சிகளான அம்னோ (United Malay National Organisation (UMNO), மலேசிய சீனர் கழகம், மலேசிய இந்தியர் பேராயம் ஆகிய அரசியல் கட்சிகள் 1946-ஆம் ஆண்டில்தாம் தோன்றின. சான் எ. திவி அவர்கள் மலேசிய இந்தியப் பேராயத்தின் முதல் தலைவர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பாட்டாளித் தோழர்களுக்கு வழி காட்டவும், பாதுகாப்பு நல்கவும் தொழிற்கழக அமைப்பும் 1946-இல் தான் ஏற்பட்டது. இன, மொழி, கலை பண்பாட்டு உணர்வுகளை வளர்க்க மலேசியத் திராவிடர் கழகமும் 1946-இலேதான் நிறுவப்பட்டது. எல்லாவகை யான எண்ண எழுச்சிகளுக்கும் மலேசியத் தமிழர்களுக்கு 1946-ஆம் ஆண்டே அடித்தளம் அமைத்தது எனலாம்.

மேற்படி இயக்கங்கள் அமைந்த காலங்களில் அவற்றிற்கு ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் பெரியவை; மிகப் பெரியவை. எல்லா இடையூறுகளையும் வென்று இன்று அவை பொலிவோடு நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணிகள் ஆற்றுவதை எண்ணியெண்ணி இறும்பூதெய்துகிறோம்.

### நாட்டு விடுதலை

1946-இல் எழுந்த புத்தொளி, நாட்டின் எழுச்சியுணர்வுகளை ஏற்படுத்தியது. அடிமைத்தளை அறுபட வேண்டுமென்ற உரிமை வேட்கை இந்தக் காலக் கட்டத்தில்தான் முகிழ்த்தது. நாட்டு விடுதலைக்கு முதல் குரல் கொடுத்தது பேரளவு தமிழர்கள் நிறைந்த இயக்கமான மலேசிய இந்தியர் பேராயமே என்று எண்ணும் போது நம் நெஞ்சம் விம்முகிறது.

நாட்டு விடுதலைக்கு வித்திட, மலாய்க்காரர்களின் அரசியல் இயக்கமான அம்னோவும், சீனர்களின் இயக்கமான மலேசிய சீனர் கழகமும், இந்தியர்களின் இயக்கமான மலேசிய இந்தியர் பேராயமும் 1954-இல் கூட்டணியாக இணைந்தன. 1954-இல் நடந்த பொதுத் தேர்தலில் மலேசிய இந்தியப் பேராயமும் பங்கு பற்றியது. முதன் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராகக் கட்சியின் அப்போதைய தேசியத் தலைவர் துன். வீ. தி. சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமைச்சராகவும் பதவியேற்றார். தொடர்ந்து குடியுரிமைத் தந்தை துங்கு அப்துல் இரகுமான் அவர்கள் தலைமையில் கூட்டணி ஆற்றிய உறுதி மிக்க பெரும்பணிகளால் 1957-ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றது.

### விடுதலைக்குப் பின் :

விடுதலைக்குப் பின் நாட்டில் பெறும் மாறுதல்கள் ஏற்பட்டன. ' பிழைக்க வந்தவர்கள்'' என்ற நிலை மாறி அனைவரும் உரிமை மிக்க குடிமக்கள் என்ற நிலை மலரத் தொடங்கியது. குடிஉரிமை வழங்குவதில் அரசு பெரிதும் சலுகை காட்டியது. எதிலும் விழிப்பு மிக்க சீன மக்கள் விரைந்து குடி உரிமை பெற்றார்கள். இந்திய மக்கள் — தமிழ் மக்கள் தயக்கம் காட்டினர். மலேசிய இந்தியர் பேராயம் மேற்கொண்ட பெருமுயற்சியால் பட்டி தொட்டியெங்கும் குடிஉரிமை பெறுவதன் தேவையை அது தக்க முறைகளில் உணர்த்தியதால் பெரும்பாலோர் குடிஉரிமை பெற்றனர். அப்போது கிடைத்த அரியவாய்ப்பை நழுவ விட்டவர்களில் பலர் இன்றும் கண் கலங்கி நிற்கிறார்கள்.

### ஆட்சித் துறையில் :

1955-இல் தமிழர்களில் ஒருவர் மட்டுமே அமைச்சர் பொறுப்பில் இருந்தார். பின்னர் இரண்டு அமைச்சுகள் தரப்பட்டன. இப்போது

மாண்புமிகு டான் திரு - டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்கள் மூத்த அமைச்சர்களில் ஒருவராகவும், மாண்புமிகு சி. சுப்பிரமணியம், மாண்புமிகு கு. பத்மநாபன் ஆகியோர் துணை அமைச்சர்களாகவும் பொறுப்பு ஏற்றிருக்கின்றனர். இவற்றோடு மாநிலச் சட்டமன்றங்களில் உறுப்பினர்களாகவும் சட்டமன்ற ஆட்சிக் குழுக்களில் உறுப்பினர்களாகவும் எழுவர் பொறுப்பு ஏற்றிருக்கின்றனர். நாடாளுமன்ற மேலவை (செனட்) உறுப்பினர்களாக ஆறு பேர் பதவி ஏற்றிருக்கின்றனர்.

டான் திரு-டத்தோ எசு. ஒ. கே. உபைதுல்லா அவர்கள் மேலவைத் துணைத் தலைவராக விளங்குகிறார்.

பத்து இலக்கம் பேரைக் கொண்ட இந்தியக் குமுகத்திற்கு நாடாளு மன்றத்திலும் சட்ட மன்றங்களிலும் கிடைத்துள்ள இடங்கள் மிகவும் குறைவே. இக்குறையை நீக்க நீண்டகாலமாகவே குரல் எழுப்பப் பெறுகிறது.

**எதிர்க் கட்சிகளில் :**

ஆளுங்கட்சியில் இணைந்து பொறுப்பான பதவிகள் ஏற்றதோடு, எதிர்க் கட்சிகளிலும் தமிழர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளனர். மக்கள் முற்போக்குக் கட்சியின் நிறுவனர்களான வழக்கறிஞர்கள் டி. ஆர். சீனிவாசகம், எசு. பி. சீனிவாசகம், உடன் பிறப்பாளர்கள் இருவரும் மக்களின் பேராதரவைப் பெற்றவர்களாக விளங்கினார்கள். இவர்கள் இருவரும் அடுத்தடுத்துக் காலமானதால் கட்சியும் கட்டுடைந்து தளர்ந்தது.

எதிர்க் கட்சியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மற்றொருவர் திரு. வி. டேவிட். இவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்தில் துணிந்து பேசக் கூடியவர். பெக்கெமாசு கட்சியின் வேட்பாளராக 1974-இல் நாடாளுமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் போட்டியிட்டு இரண்டிலும் தோலவி கண்டார். கெராக்கான கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கி மறைந்த மாண்புமிகு வீரப்பனும், குடியரசுச் செயல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த பர். சூரியனும் அடுத்துக் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

**அரசுத் துறைகளில் தமிழர் :**

அரசாங்கத் துறைகளில் பெரும் பதவிகளில் அதிக அளவு தமிழர்கள் இல்லையென்றாலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு சில பெரும் பதவிகளில் தமிழர்கள் பொறுப்பு ஏற்கவே செய்கின்றனர். ஒருலக அவையில் (ஐ. நா.) மலேசியாவின் பேராளராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு.

இரமணி அவர்கள். மலேசியக் கடற்படையின் தலைமைத் தளபதி யாகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர் டத்தோ. தனபாலசங்கம் அவர்கள், சட்டத்துறையில் நல்லறிஞராக விளங்கிய காலஞ்சென்ற டான் திரு-டத்தோ ஆதிநாகப்பன் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றதோடு அரசுத் துறைகளில் பலவகைப் பொறுப்புக்கள் தாங்கியிருக்கிறார். இப்போது தொழி லாளர் துணை அமைச்சரான மாண்புமிகு கு. பத்பநாபன் அவர்கள் சிறந்த பொருளியல் வல்லுநராவார். இவர் தலைமையமைச்சுத் துறையின் தலைமைச் செயலாளராகப் பொறுப்பு ஏற்றுள்ளார். மலேசிய வானொலியின் முன்னாள் இந்தியப் பகுதித் தலைவரான திரு. இரா. பாலகிருட்டிணன் அவர்கள் இப்போது ஒலிபரப்புத் துறையின் இயக்குநராகப் பதவி தாங்குகிறார். காவல் துறைகளில் தமிழர் மதிப்பு மிக்க பொறுப்புகளில் உள்ளனர். காவல் துறையில் இன்று பெரும் பதவி தாங்கும் தமிழர் திரு. அழகேந்திரா ஆவார். நாட்டுப் பாதுகாப்பிற்கும் பொதுவுடைமை ஒழிப்பிற்கும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் பல வீரர்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்திருக்கின்றனர். மற்றும் கல்வி ஆராய்ச்சி, தேசியக் கப்பல் நிறுவனம், வானூர்தி தேர்தல் குழு, பொதுப்பணிக் குழு (P- S. C.) முதலிய துறைகளிலும் தமிழர்கள் முகாமையான பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள்.

**விளையாட்டுத் துறை:**

மலேசியாவில் மிகவும் வேகமாக முன்னேறிவரும் துறைகளில் விளையாட்டுத் துறையும் ஒன்று. விளையாட்டுத் துறையில் தமிழர்கள் பெருமைபடத் தக்க விளைவுகளைப் புரிந்து வருகிறார்கள். 'ஆசியாவின் அதிவேகமாந்தர்' என்ற சிறப்புப் பெற்றவர். செகதீசன் ஓட்டப் பந்தயத்தில் மலேசியாவின் முடிசூடா மன்னராக விளங்கியவர். காற்றெனப் பறந்து காண்போரைத் திகைக்க வைக்கும் வீராங்கனை யான இராசாமணி அம்மையார் ஓட்டப் பந்தயத்தில் பெரும் விளைவுகள் புரிந்தவர். இவர்களைத் தொடர்ந்து பலர் இத்துறையில் வளர்ந்து வருகிறார்கள். அனைத்து உலக அரங்குகளில் மலேசியா வின் கால்பந்து விளையாட்டுக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்று வெற்றிகள் ஈட்டிய திரு. சந்திரன் வளைமட்டைப்பந்து (ஆக்கி) விளையாட்டுக் குழுவின் தலைமைப் பொறுப்பேற்று உலக அரங்கில் மலேசியாவின் பெருமையை உயர்த்திய திரு. சண்முகநாதன் ஆகி யோரின் தொண்டை நாடு மறக்க முடியாது. பூப்பந்தாட்டத்தில் தேசிய வீரனாகி மிகக் குறைந்த வேறுபாட்டில் உலக வீரனாகும் வாய்ப்பை இழந்த பூப்பந்து வீரர் திரு. குணாளன் இப்போது மலேசியாவின் பூப்பந்தாட்டப் பயிற்சியாளராகப் பணி புரிந்து மலேசியாவின் செல்வாக்கை உயர்த்த முனைந்து வருகிறார். இத் துறையில் விரைந்து முன்னேறி வருகிறார் தேசிய வீரர் திரு. சேம்சு செல்வராசு.

(தொடரும்)

# ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழியில் தமிழ்ச் சொற்கள்.

அண்மையில் பரத நாட்டியக் கலைஞர் **பத்மா சுப்பிரமணியம்**, தம் சென்னைக் கலைக் குழுவினருடன் ஆத்திரேலியாவில் சுற்றுச் செலவு செய்கின்ற பொழுது, அங்கு மேற்கு ஆத்திரேலியாவில் தற்செயலாக, எங்கோ ஒரு மூலையில் வாழும் பழங்குடி மக்கள் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கண்டு கூறியுள்ளார்.

மேற்கு ஆத்திரேலியாவின் வட பகுதியில் மாமணல் பாலை நிலத்தைச் சேர்த்தவர்கள் **பக்ரோ** மலைவாழ் பழங்குடி மக்கள். இந் நிலம் சூடு கொப்பளிக்கும் ஒரு வறண்ட நிலம். மக்கள் மிகுதியும் தொடர்பு கொள்ளாத ஒதுக்குப் பகுதியும் ஆகும். இங்கு வாழும் **பக்லோவியா** என்னும் பழங்குடி மக்களுக்கு அவர்கள் பேசும் மொழியைத் தவிர வேறு மொழி தெரியாது. எனவே இக் கலைஞர் குழு அவர்களிடம் செய்கைகள் வழியாகத்தான் தொடக்கத்தில் தொடர்பு கொள்ள முடிந்தது. அதன் பின்னர் இக் குழுவினர் அக் குழுவிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் அவர்கள் பேசும் மொழியில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இபபழங்குடி மக்கள இந்தியாவிலிருந்து வந்தவர்களாக இருக்கக் கூடுமென மக்களின ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இருபதாயிரம் அல்லது ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆத்திரேலியாவிற்கு வந்து குடியேறியிருக்கலாமென்று இவர்கள் மதிப்பிடுகின்றனர். இலெமூரியாக் கண்டம் இருந்ததென்ற வரலாற்றின் அடிப்படையில் தென்கிழக்கு ஆசிய நிலங்கள் பிரிவதற்கு முன்னமே இருந்து வந்த தொடர்பாகவும் இருக்கலாம்.

பக்லோவியர் பயன்படுத்திய சில சொற்கள் பண்டைத் தமிழில் உள்ள பொருளுடன் இருந்ததென்பதையும் செல்வி. பத்மா குறிப்பிட்டுள்ளார். இவரும் இவருடன் இவர் குழுவில் வந்திருந்தவரும் ஏறத்தாழ இருபது தமிழ்ச் சொற்களைக் குறித்துக் கொண்டனர்.

**'முட்டி'** என்னும் முழந்தாளைக் குறிக்கும் சொல் பக்லோவியர் பேச்சில் உள்ளது. **'ஏறுகிறது'** (கொச்சையாக **ஏறுது**) என்னும் தமிழ்ச் சொல்லும் அவர்கள் மொழியில் வழங்குகிறது. **மின்னல், பாப்பு** என்ற சொற்களும் அவர்களிடம் பயில்கின்றன. அத்துடன் முகத்தில் பூசிக்கொள்ளும் நீறை அவர்கள் **மாவு** என்று சொல்கிறார்கள். 'இச் சொற்கள் ஏதோ தற்செயலாக ஒன்றுயிருப்பன வாகச் சொல்ல முடியாது. இச் சொற்களின் ஒற்றுமைகள் மிக விரிவாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். தொடக்கக்கால

திராவிட இனத்திலிருந்து தோன்றியவர்களாக இப்பழங்குடி மக்கள் இருக்கக்கூடும். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆத்திரேலியாவில் வாழ்ந்த போதிலும், திராவிட மொழியில் சிறிது பகுதியைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது' என்று செல்வி பத்மா கூறுகிறார்.

அவர் மேலும் கூறுகையில், 'தமிழ் மொழியிலும் பக்லோவியர் மொழியிலும் பாம்புக்கு ஒரே பெயர் இருப்பதைக் கண்டோம். இந்த ஒற்றுமை மொழியுடன் நிற்கவில்லை. 25000 ஆண்டுகளுக்கு முந்தி, இந்தியாவில் வாழ்ந்த நாகர்களுக்கும் இன்றைய ஆத்திரேலிய பக்லோவியருக்குமிடையில் பழக்க வழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் கூட ஒற்றுமை காணப்படுகிறது. இந்த ஒற்றுமையினை நாங்கள் மேலெழுந்தவாரியாக மட்டுமே பார்க்க முடிந்தது. இதனை மேலும் ஆழ்ந்து விரிவாக ஆராய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. மொழியியலில் மட்டுமல்லாமல் இசை, சடங்குகள், உடல் குறிகள் அணிதல் முதலியவற்றிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது' என்று கூறுகிறார். பத்மா குழுவினர் சென்னை திரும்பியதும் இது பற்றித் திராவிட மொழியியல் அறிஞர்களுடன் கலந்து உரையாடக் கருதியிருக்கின்றனர்.

**— அடிப்படை 'தினமணிச்சுடர்' (28-10-79.)**


## "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 30 உருபா | 30 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 15 ,, | 15 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# செய்திகள்

## 1 க. வெள்ளிமலை—தாமரைவாணி வாழ்க!

கடந்த துலை 14 (31-10-79) அறிவன் கிழமை, திருப்பூர் முருகம்பாளையம், நா. கறுப்புச்சாமி—நாச்சம்மாள் இவர்களின் மகன், செல்வன். க. **வெள்ளிமலை** என்னும் வெள்ளியங்கிரிக்கும், திருப்பூர் எசு. முத்துச்சாமி—சுப்புலக்குமி இவர்களின் மகள், செல்வி. **தாமரைவாணி** என்னும் பத்மாவதிக்கும், திருப்பூர் வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் இனிது நடந்தேறியது. அது சமயம் மணமக்களை வாழ்த்தி, பாவலர் திரு. **குமர நடவரச சிவப்பனார்** முதலியோர் உரையாற்றினர். திருமண நாள் வெளியீடாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் **'தமிழா எழுச்சிகொள்'** என்னும் நூலை, **தென்மொழி ந முத்துக்குமரன்** அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை நிகழ்த்த, தி. மு க. ஒன்றியச் செயலர் திரு. **இரா. முருகேசன்** அவர்கள், நூலை ஏற்று வாழ்த்துரை வழங்கினார்கள். இனிய விருந்துக்குப் பின்னர் திருமண விழா இனிது நிறைவுற்றது.

## 2. திருக்குறள் மன்றம், பல்லடம், சிறப்புக் கூட்டம் :

கடந்த துலாம் 14 (31-10-79) மாலை 7 மணியளவில் பல்லடம் சுப்பையனார் கிடங்கில் பல்லடம் திருக்குறள் மன்றச் சிறப்புக் கூட்டம் சிறப்புற நடைபெற்றது கூட்டத்திற்கு, பாவலர் திரு **குமர. நடவரச சிவப்பனார்** தலைமை தாங்கினார். கூட்டத் தொடக்கத்தில் தென்மொழி **ந இளமாறன்** தென்மொழிப் பாடல்களைப் பாடினார். அடுத்து, தென்மொழி **ந. முத்துக்குமரன்** வரவேற்புரையாற்றினார். தலைவர் முன்னுரைக்குப் பின் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'திருவள்ளுவரின் உயிரியற் கொள்கை' என்னும் தலைப்பில் 2½ மணி நேரம் அரியதொரு மெய்ப்பொருளுரையாற்றி அவையினரை மெய்யுணர்வெய்தச் செய்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் மன்றப் பொருளர் திரு. **கி. சண்முகம்** க. மு. நன்றியுரை யாற்ற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 3. திருவள்ளுவர் அச்சகத் தொடக்க விழா—கோபி :

பெரியார் மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில், கடந்த துலை 16 (2-11-79) காலை 10 மணியளவில், **69,** வழக்கு மன்றத் தெருவில்; கோபி வழக்குரைஞரும், 'மலர்க மாநில சுயாட்சி'

நூலாசிரியரும் ஆகிய திரு. (கு. ச. **ஆனந்தன்**, க. மு. ச. இ; அவர்களின் முயற்சியால், திருவாட்டியர் சூரியகுமாரி ஆனந்தன், தங்கம் ஆனந்தன் ஆகியோரை உரிமையாளராகக் கொண்ட, **திருவள்ளுவர் அச்சகத்** தொடக்க விழா சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு ஈரோடு, வேலா அச்சக உரிமையாளரும், சிறந்த பொதுத் தொண்டரும், தனித்தமிழ்ப் பற்றுளரும், வேலா அறக்கட்டளை நிறுவன இயக்குநருமாகிய திரு. **வேலா. அரசமாணிக்கனூர்** அவர்கள் தலைமை தாங்கினர். கோபி வள்ளல் திரு. 'தங்கமணி' **கே. முத்துவேலப்பர்** அச்சகத்தில் விளக்கேற்றி வைத்தார். கம்பன் செஞ்சொற் கொண்டல் திரு. **க. கு. கோதண்டராமனூர்** திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார். அடுத்து **பாவலரேறு பெருஞ்சித்திரனூர்** அவர்கள், அச்சுப் பொறியை இயக்கி. அச்சகத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினர். தலைவர் முன்னுரை வாழ்த்துக்குப் பின் திருவாளர்கள், பி. என். நஞ்சப்பன், வேணுகோபாலன், பி. கே. பழனியப்பன், என். ஆர். திருவேங்கடம், வாரணவாசி, பேரா. க. அரங்கசாமி, க. மு. வெங்கிசுப்பு, வழக்குரைஞர் இரா. பி. இரத்தினம், புலவர் பாரி மணியம் க. மு, ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். இறுதியில் கோ. பி. வெங்கிடு நன்றியுரைக்குப் பின் விழா இனிது நிறைவுற்றது. விழாவிற்கு வந்திருந்தார் அனைவர்க்கும் சிற்றுண்டியும் குளம்பியும வழங்கப் பெற்றன.

### 4. கவுந்தப்பாடி—அரசு மேனிலைப் பள்ளி இலக்கிய விழா :

பெரியார் மாவட்டம் கவுந்தப்பாடி அரசு மேனிலைப் பள்ளி இலக்கிய விழா, சென்ற துலை 16 (2-11-79) பிற்பகல் 4 மணியளவில், பல்லடம் அறிவியல் ஆசிரியர் திரு. **தென்மொழி ந. முத்துக்குமரன்** அறி.இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் பாவலர் **குமர. நடவரச ஈவப்பனூர்** உரையாற்றினர். அதன் பின்னர் **பாவலரேறு பெருஞ்சித்திரனூர்** அவர்கள் 'மாணவர்கள் எதிர்காலம்' என்பது பற்றி அரியதொரு சிறப்புரை யாற்றினர்கள். தொடக்கத்தில் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. கே. கே. குழந்தைச்சாமி வரவேற்புரை யாற்றினர். தமிழாசிரியர் முத்துக்கணேசன் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

### 5. திருக்குறள் பேரவை, கோபிசெட்டிபாளையம், வழக்காடு மன்றமும், 3-ஆம் சிறப்பு நிகழ்ச்சியும் :

கடந்த 2-11-79 மாலை 6 மணியளவில், பெரியார் மாவட்டம், கோபிசெட்டிபாளையம், வைர விழா முதனிலைப் பள்ளியில்

'திருவள்ளுவர் பெண்ணுக்குச் சம உரிமை வழங்கவில்லை' என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. வழக்குத் தொடுத்தவர் 'பூங்கோதை' ஆசிரியர் திருவாட்டி. **ஆயிழை கணபதி.** எதிர் வழக்காடியவர் திரு. **கணபதி** அவர்கள். நடுவர் திரு. **மு. நாகேசுவரன்** வழக்கைத் தள்ளுபடி செய்து, திருவள்ளுவர் பெண்ணுக்குச் சம உரிமை வழங்கினுர் என்று தீர்ப்பளித்தார். நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பேரவையின் 3-ஆம் சிறப்புச் சொற்பொழிவாக, மாலை 8-30 மணியளவில் **பாவலரேறு பெருஞ்சித்திரனுர்** 'அறம் என்பது யாது?' என்னும் பொருளில் இரண்டு மணி நேரம் அரியதொரு மெய்ப்பொருளுரையாற்றினுர் அவையோர் இவ்வரிய ஆய்வுரையை இறுதிவரை கலையாமல் இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. சிறப்புரைக்கு முன் தென்மொழி **ந முத்துக்குமரனுர்** அவர்களும், திரு. **குமர. நடவரச ஈவப்பனுர்** அவர்களும் உரையாற்றினர். சிறப்பு நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் திரு. **எசு. ஆனந்தம்** தலைமை தாங்கினுர். பேரவைச் செயலர், திரு. **பாரி. மணியம்** க. மு. நன்றி கூற, நிகழ்ச்சி இரவு 11 மணியளவில் இனிது நிறைவுற்றது.

### 6. மு ஆறுமுகம்—மரகதம் வாழ்க!

சென்ற துலை 23 (9-11-79) வெள்ளிக்கிழமை, திருவண்ணமலை திருவூடல் தெருவிலுள்ள விருதுநகர் திருமண மண்டபத்தில், நெடுநாளைய தென்மொழியன்பரும், மாணவர்களிடம் எவரினும் மிகுதியாகத் தமிழ்ச்சிட்டைப் பரப்பியவரும் ஆகிய புலவர் **மு. ஆறுமுகம்,** க. மு. அவர்களுக்கும், செல்வி, **மரகதத்திற்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனுர்** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, பாவலர் திரு. **குமர. நடவரச ஈவப்பனுர்** புதுவை, தனித்தமிழ் இயக்கச் செயலர் திரு. **தென்மொழி க. தமிழமல்லன்**, திரு. **கிருட்டிணமூர்த்தி**, திரு. **மா. முத்துச்சாமி** க. மு, ஆ. ப. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. **சிவப்பிரகாசம்,** வணிக. மு. அவர்கள் நன்றியுரைக்குப் பின் திருமண நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## பிற செய்திகளும் நன்கொடைகளும்

### 1. பெயர்ப்பலகைத் தமிழாக்கம்—புதுவை :

துலைத் திங்கள் கரு-ஆம் பக்கல் (1-11-79) அன்று, புதுச்சேரியை அடுத்த முதலியார் பேட்டை, அரியநகர் ஆகிய பகுதிகளில் உள்ள வணிக நிலையங்களுக்கு நேரிற் சென்று பெயர்ப்பலகைகளைத் தூய தமிழில் எழுதி வைக்குமாறு தனித்தமிழ்க் கழகம் கேட்டுக்

கொண்டது. ஏற்கனவே இக்கழகத்தின் முயற்சியால் பல கடைகள் தங்கள் பெயர்ப் பலகைகளைத் தூய தமிழில் மாற்றியுள்ளன. எடுத்துக் காட்டாக, 'மாடர்ன் டிரை கிளீனர்சு என்பது **'புதுமை உலர் வெளுப்பகம்'** என்றும், 'மாறன் எலக்ட்ரானிக்சு' என்பது **மாறன் மின் அணுவியல்** என்றும், 'இராசலட்சுமி மெடிக்கல்சு' என்பது **இராசலட்சுமி மருந்தகம்** என்றும், 'நியூ இசுட்டைல் டெயிலர்சு' என்பது **புதிய ஒயில் தைலகம்,** என்றும் தூயதமிழில் மாற்றப் பெற்று அழகாகக் காட்சி தருகின்றன. அன்பர்கள் கடைகளின் பெயர்களைத் தனித்தமிழில் எழுதிக் கொடுத்தும், அரசுக் கட்டளையைச் சுட்டிக் காட்டியும் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதி வைக்குமாறு வணிகர்களை அன்புடன் கேட்டுக் கொண்டனர். இப்பணியில் தனித்தமிழ்க் கழகச் செயலர் க தமிழமல்லன், பொருளர் சி. தமிழ்மறவன், ஆசிரியர் கழகத் தலைவர் பத்மநாபன், சீவானந்தம், மஞ்சினி, சீனு, அரிகிருட்டிணன், விநாயகம், தேவநாதன். தனசேகரன் ஆகியோர் சிறு மழையையும் பொருட்படுத்தாமல் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

## 2. புதுச்சேரி தனித்தமிழ்க் கழகச் செயற் குழுவின் வேண்டுகோள் :

புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகச் செயற்குழு அண்மையில் கூடி, கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு விடுத்துள்ளது.

**தீர்மானங்கள் :**

1. தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டு புரிந்த **நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு** அவரின் நூற்றுண்டான இவ்வாண்டில் அவருக்குச் **சிலை வைத்துப் பெருமைப்** படுத்துமாறு தமிழக அரசையும் புதுச்சேரி அரசையும் தனித்தமிழ்க் கழகம் கேட்டுக்கொள்கிறது.

2. நெடுங்காலமாகத் தமிழறிஞர்களால் வற்புறுத்தப்பட்டு வருகின்றபடி தமிழிலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்காகத் தனியே, **தமிழ்ப் பல்கலைக் கழகம்** ஒன்றை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக அரசைத் தனித்தமிழ்க் கழகம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

3. மருத்துவப் படிப்பும் பொறியியல் படிப்பும் தமிழில் கற்பிக்கப் பெறவேண்டும் என முயற்சி நடைபெறுகிற தமிழ் மறுமலர்ச்சிக் காலமான இக்காலத்தில், **புதுச்சேரியில்** சென்ற ஆண்டு முதல் நடந்து வரும் **மேனிலைப் பள்ளி 11, 12 வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழியாக இல்லாமை** மிகவும் வருந்தத் தக்கது. புதுச்சேரி அரசின் மேனிலைப் பள்ளிகள் ஒன்றில்

கூட தமிழ் பயிற்று மொழியாக இல்லாதது, தமிழ் புறக்கணிக்கப் படுகிறது என்று கருதத் தக்கதாகும்.

எனவே அடுத்த கல்வியாண்டு முதல், தமிழ் வழங்கும் பகுதி களாகிய புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள அரசின் மேனிலைப் பள்ளிகள் அனைத்திலும் தாய்மொழியாம் தமிழைப் பயிற்று மொழியாக்குமாறு புதுச்சேரி அரசைத் தனித்தமிழ்க் கழகம் கேட்டுக்கொள்கிறது.

4. புதுச்சேரி, பாவேந்தர் பாரதிதாசனாரால் பெருமை பெற்ற தாகும். அவர்தம் படைப்புகள் அனைத்தையும் நூலகத்தில் பார்க்கவும் பயிலவும் வாய்ப்பிருத்தல் வேண்டும். ஆதலால் இப்போது பொது நூலகத்தில் 'அரவிந்தர் நூல்கள்', 'நேரு நூல்கள்' ஆகிய வற்றைத் தொகுத்து மேற்கோள் நூல்களாக (Reference Books) வைத்திருப்பது போன்று பாவேந்தர் பாரதிதாசனாரின் நூல்கள் அனைத்தையும் வாங்கித் தொகுத்து வைக்குமாறு புதுச்சேரிஅரசைத் தனித்தமிழ்க் கழகம் கேட்டுக்கொள்கிறது.


வெளிவந்து விட்டது ! விற்பனைக்குக் கிடைக்கிறது !

பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

**அரிய பாடற்களஞ்சியம்**

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ 18000 வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு ! செந்தமிழ்த் தேனூறு !

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய
இலக்கியப் பாச்சுரங்கம் !

| | | |
|---|---|---|
| **முதல் தொகுதி** | **உரு.** | **15—00** |
| **2-ஆம் தொகுதி** | ,, | **11—00** |
| **3-ஆம் தொகுதி** | ,, | **17—50** |

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில் விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு
தென்மொழி, சென்னை-5.

# பெருஞ்சித்திரனார் பாடல்கள்
## கனிச்சாறு
## வெளியீட்டு விழா - நிகழ்ச்சிச் சுருக்கம்

தன்னேரிலாத் தகைமையும், தலைமையும் சான்ற தண்டமிழ்— ஆரிய அடிதுமிப்பால் கடந்த இருபது நூற்றாண்டுகளாக இயன் வளர்வில் தளர்வுற்றுத் தாக்கல் ஏற்றுத் தழைப்புறவியலாது, தொடர்ந்து வந்த அவலநிலைக்கு முற்றழிப்புச் செய்யும் முனைப்பை யும், அம்மொழியைப் பற்றிக் கவலுறுது காலந் தள்ளிப் போய்க் கொண்டிருக்கின்ற உலகப் பெருநாகரிக இன அமைப்பு உணர் விலாது தேய்ந்து திசைமாறுதலைத் திருத்தி மேம்பாடு கொள்வதற் கான விழிப்புணர்ச்சி கொளுத்தும் உரத்திற முயற்சியையும், அம் மொழியின் அதன் இனத்தின் பெருமையும் மேலோக்கமும் தொடர்ந்து நிலைப்பெய்து முகத்தான், அவை பயின்றுயிர்க்கும் நிலத்தின் மீட்சிக்கான அடிப்படை வினைகளையும் ஒருசேரத் தழுவிய வீறு நெஞ்சத்தொடு கடந்த முப்பத்தைந்தாண்டுகளாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களால் புறந்தரப் பெற்ற எழுச்சிப் பாக்களின் தொகுப்பு, முந்நூல் பகுப்புகளாகக் **'கனிச் சாறு'** என்னும் பெயரில் கடந்த தி. பி. உ௰கய துலாம் உரு-ஆம் பக்கல் (11-11-79), சென்னை அண்ணுசாலையிலுள்ள நடுவண் நூலகப் பேரரங்கில் வெளியீட்டு விழா கொளுவப் பெற்றது.

விழா தொடங்குவதற்கு ஒரிரு மணிகளுக்கு முன்பாகவே தென்மொழிப் படைஞர்களும், அவர்தம் குடும்பங்களும் அரங்கில் படிப்படியாகக் களிப்புற உள் நிறையத் தொடங்கினர். விழாக் குழு வினரால் முறைப்படியாக முன்னமேயே திட்டமிடப்பட்டவாறுய்த் துல்லியமாகக் காலை 9-30 மணி அளவில் தொடக்கங் கொண்டது. திறனுய்வரங்கில் பங்கேற்க வந்திருந்த அறிஞர் பெருமக்களும், தலைவர்களும், பேராசிரியர்களும் விழா மேடையில் வீற்றிருந்தனர்.

வெளியீட்டுக் குழுவின் உறுப்பினரும், விழாக் குழுவின் உறுப் பினரும் ஆகிய தென்மொழி **ப. துரையரசன்** க. இ. அவர்கள் வீற்றுக் களிப்பொடு அப்பெரும் விழாவின் தலைவராகிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியராகிய **பர். க த. திருநாவுக்கரசு,** க. மு. அவர்களின் பணிச் சிறப்புகளை மேற் சுட்டியவாறு தலைமை அமர்த்த உரை நிகழ்த்தினர்

பின்னர் செல்வி. **மா தேன்மொழி** 'விரிவிசும்பை..,' எனத் தொடங்கும் இறை வணக்கப் பாடலையும், செல்வி. **மா. செந் தாழை** 'அன்னை மொழியே....' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் இன்னமைவொடு இசை பிறக்கினர்.

அவ் வணக்க முறை அமைவுக்குப் பின்னர், தென்மொழிப் படைஞரும் நூல் வெளியீட்டின் முயற்சியைப் பேரளவில் தம் தோளில் தாங்கியவரும், வெளியீட்டு மற்றும் விழாக் குழுவினரும் ஆகிய தென்மொழி **ந. முத்துக்குமரன்**, அறி. இ. அவர்கள் விழாவிற்கு வந்திருந்த பெருமக்கள் அனைவரையும் வரவேற்றதோடு ஐயா அவர்களின் தன்னலமற்ற தூய தொண்டினையும், வாழ்க்கைச் சிறப்பையும் விளக்கியவாறே தம் வரவேற்புரையை நிகழ்த்தினார். வரவேற்புரைக்குப் பின்னர் பேரா. **பர் க. த. திருநாவுக்கரசு**, க. மு. அவர்கள் தம் பணிவும் செம்மாப்பும் பிணைந்த இனிய தலைமை யுரையில் நூலின் தலைப்புப் பொருத்தம், அடங்கன் முறை, தொகுதிப் பாகுபாடு, முன்னுரைச் சிறப்பு, உள்ளுறைச் சிறப்பு, தமிழ்க்காப்பு, தமிழினக்காப்பு, தமிழ் நில மீட்பு முதலிவை பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் தொகுத்துரைத்தார்.

'கனிச்சாறு' என்னென்ன அகப்புறச் சிறப்புகளோடு ஒளிர்ந்து பிறங்குகின்றது என்பதையும், அதன் காலத் தேவையையும் அதன் வெளிப்பாட்டு முயற்சியையும் விளக்கிய அறிமுகவுரை, தென்மொழி **மறை. நித்தலின்பனார்** அவர்களால் உணர்வுற நிகழ்த்தப் பெற்றது. அறிமுகவுரைக்குப் பின்னர், விழாத் தலைவர் அவர்கள் அந்நூலை வெளியிடுவித்தார். அந்நூலின் முதன் மூன்று தொகுப்பு களைப் பெருமகிழ்வொடு ஏற்று, மாநிலக் கல்லூரி வரலாற்றுத் திணைக்களப் பேராசிரியரும், 'தமிழ்நில வரலாறு' நூலாசிரியரும் ஆகிய **பர். கோ. தங்கவேலனார்**, க. மு., ச. இ. இல. இ., அவர்கள் தம் ஏற்புரையில் இஃதொரு சிறந்த கால வரலாற்றையும், அதன் தேவையையும், விழுந்துபட்ட ஓரினத்தின் மறுமலர்ச்சியை யும் உணர்த்துவிக்கும் நூலாக மிளிர்கிறதென்று பலபடப் பாராட்டிப் பேசினார்.

ஏற்புரைச் சிறப்புக்குப் பின்னர், திறனாய்வரங்கம் அணிய நிலையில் முன்னின்றது. விழாத் தலைவர் திறனாய்வரங்கப் பெரி யோர்களை முன் முகப்படுத்த, பெருஞ்சித்திரனார் பாடல்களில்,.. 'தமிழ்', 'இந்தி எதிர்ப்பு', 'இயற்கை', 'இன எழுச்சி', 'நாட் டுணர்ச்சி', 'பொதுமை', 'இளைய தலைமுறை', 'காதல்'—என்ற அரிய இனிய தலைப்புகளின்கீழ் முறையே புலவர் திரு. **இறைக் குருவனார்**, தென்மொழி **க. தமிழமல்லன்**, பேரா. **மு தமிழ்க் குடிமகனார்**, புலவர் **தி. நா அறிவொளி, அரு. கோபாலன்**, பேரா. **அ. பசுபதி**, தமிழூர் **ப அருளி** ஆகியோர் பாவலரேற்றின் பதங்கெழுமிய பாச்சிறப்புகளை ஆய்ந்து கூறுபடுத்தி நல்லுரை பிளிற்றினர். மதுரை யாதவர் கல்லூரி முதல்வராகிய பேரா. **மு. தமிழ்க்குடிமகனார்**, க. மு. அவர்கள் 'இயற்கை' என்னும் பொருளில் ஆற்றிய, தம் திறனாய்வுரையில் ஆசிரியரோடு தாம் பழகிய நாட்களை நினைவுபடுத்தி, அவர்தம் செய்யுள் கூறுகள்

சிலவற்றை வியந்துரைத்தார். பகல் 2-30 மணி அளவில் காலை நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது. விழாவில் பங்கேற்க வந்து சிறப்பித்த பெருமக்கள் அனைவரும் பிற்பகல் நிகழ்ச்சிக்கு முன்னர் இடையோய்வு கொண்டனர்.

மீண்டும் பகல் 4-00 மணி அளவில் விழா அரங்கு புத்துணர்ச்சியும் பொலிவும் வேய்ந்தது. தொடக்கத்தில் தென்மொழி **ந. இளமாறன்** அவர்கள் பாவலரேற்றின் பாடல்கள் இரண்டை உணர்வு கிளறப்பாடி இசையூட்டினார். அடுத்து. பாவலரேறு அவர்களின் பெயர்த்தியும் இறைக்குருவ—பொற்கொடி ஆகியோரின் கடைக் குட்டியுமாகிய **அங்கயற்கண்ணி** என்னும் பெயரிய சின்னஞ் சிறுமி விழா மேடையில் போடப்பெற்ற நாற்காலி மீதேறி நின்ற அழகு அனைவரையும் கொள்ளை கொண்டது. பொடியுருவாக மேன் மேடையில் காட்சியளித்து, "பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல் களில் சிலவற்றை உங்கட்குச் சொல்லப் போகிறேன்" என்று அவள் உரை மழலை ஊற்றியதும் அனைவர் கண்களும் ஆர்வு பொங்க அவளை மொய்த்தன: சின்னஞ்சிறு வாயினின்று பென்னம் பெரிய திருப்பாக்கள் முழக்குப் பெயர்ந்தன. உணர்வு பொங்கும் 'கணீர்' குரலில் வெளிப்பட்ட தெளிவும், விளிப்பில் பாய்ந்த விரைவழகும் கண்ணுக்கும் காதுக்கும் தேனூற்றின.

அந்நிகழ்வுத் தொடக்கத்திற்கும் பிற்பகல் நிகழ்ச்சிக்குமாக, திறனாய்வரங்க அறிஞர்களில் ஒருவராகிய புலவர் திரு. **தி. நா. அறிவொளி** அவர்கள் தலைவராக அமர்த்தப் பெற்றார். அவர் தலைமையுரைக்குப் பின்னர், கோவை கல்வியகத்தின் முதல்வரும், பன்னூலாசிரியருமாகிய பேரா. **கு. வெ கி ஆசான்,** க. மு., ச. இ; அவர்கள் உரையாற்றுகையில், இந்த நூல் வெறும் கற்பனைச் சுவைக்காக மட்டும் எழுந்த நூலன்று என்றும்; தமிழ் நாட்டு மக்களையும் அவர்தம் இன இழிவுகளையும் தமிழ் மொழியின் வளங் கொழுவிய திறனையும் விளக்கிக் கூறும் நூல் என்றும், இஃதொரு மக்கள் இலக்கியம் என்றும் பாராட்டிப் பேசினார். தமிழ் நாட்டரசின் மொழி பெயர்ப்புத் துறை நெறியாளர் **பர் ஔவை. நடவரசனார்** அவர்கள் தம் சிறப்புரையில், தமிழ்ப் பகைவர்களுக்கு இந்நூல் ஒரு பெரிய தடுப்பு நூலாகவும், எச்சரிக்கை நூலாகவும், அதே பொழுதில் தூய தமிழுக்கு அரண் செய்யும் நூலாகவும் இருப்ப தாகவும் புகழ்ந்துரைத்தார்.

அடுத்து ஈரோடை வாசவி கல்லூரிப் பேராசிரியர், பன்மொழிப் புலவர் பேரா, **மூ. சதாசிவனார்** க. மு. அவர்கள் தம் உரையில், ஆசிரியர் தாம் வேறு, தாம் படைக்கும் இலக்கியம் வேறு என்றில் லாமல், தாம் வகுத்துரைக்கும் கொள்கை கோட்பாடுகளுக்கும்,

வாழ்வியல் நெறிமுறைகளுக்கும் ஏற்பவே வாழ்ந்து கொண் டிருப்பதாகவும் பெருமைப்படுத்திப் பேசினார்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் துறையின் துணை யாளர் பன்மொழிப் புலவர் பேரா. **இரா. மதிவாணனார்,** க. மு. அவர்கள் இந்த நூலின் கருத்துகளை மக்களிடையில் பரப்புவதை அரசு தன் கடமையாகக் கொள்ளவேண்டும் என்றும், பெரியார் நூற்றாண்டை அரசு கொண்டாடுவது போலவே இந்த நூல் பற்றிய சிறப்புகளை மக்கள் உணரும்படி ஆங்காங்கே விழாக்கள் எடுப்பதில் முனைந்து நிற்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டதுடன், இந்த நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழனுடைய மொழி நலம், பண்பாட்டுச் சிறப்பு, கலைப்பெருமை, நாட்டு இன வரலாற்று வீழ்ச்சிகள் இவை பற்றி மேனாட்டார் தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டுமென்றும், இலக்கியத் துறையில் இதற்கு 'நோபல்' பரிசு பெற்றுத்தர முயற்சி செய்ய வேண்டுமென்றும் அறிஞர்களுக்கும் அரசுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

சிறப்புரையாற்றிய மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறைத் துணைப் பேராசிரியர் **பர். இரா. இளவரசு** பேசுகையில், நூலாசிரியருடன் தமக்கிருந்த இருபதாண்டு ஈடுபாட்டைப் பெருமையுடன் விளக்கிப் பல துறையிலும் சிறந்து விளங்கும் அவர் பேரறிவுத்திறனை, பல் துறையறிவும் வாய்க்கப் பெற்ற ஒருவர்தாம் உணர முடியுமென்று கூறினார்.

அடுத்துப் பாராட்டுரை வழங்கிய, தமிழ் வளர்ச்சி இயக்ககத் தனியதிகாரி **சிலம்பொலி செல்லப்பனார்,** க. மு, ப. இ. அவர்கள், மரபிலக்கியத்தின் இடைவிட்டுப்போன நிலையை இந்த நூல் மீண்டும் தொடங்கி வைக்கிறது. இவ் விருபதாம் நூற்றாண்டில் செழுமையான முழுமையான முதல் தமிழிலக்கியம் இதுவேயாகு மென்று புகழ்ந்துரைத்தார்.

தொடர்ந்து, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், தமிழாய்வுப் பேரறிஞரும் ஆகிய **பர். சி. பாலசுப்பிர மணியனார்** க மு. அவர்கள் இந்த நூலின் வெளிப்பாடு தமிழுக்குப் பெருமை தருகிறதென்றும், ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலமிக்க முன்னுரை ஒன்றிற்கே பண்டாரகர்ப்பட்டம் (D. Litt.) வழங்கலாமென்றும், இந்நூல் இல. மு. (M, Phil.) படிக்கும் மாணவர்க்கும். பண்டாரகர்ப்பட்ட (Ph. D) மாணவர்க்கும் ஆராய்ச்சி நூலாக வைக்கத் தக்கதென்றும், மூன்று மாதங்களுக்கு முன்பே தம் கையில் கிடைத்திருக்குமாயின், தம் ஆராய்ச்சி மாண வர்க்கு இந்த நூலைத் தந்திருக்க முடியுமென்றும் வெகுவாகப் பெரு மிதத்துடன் புகழ்ந்துரைத்தார்.

அடுத்து, தனித்தமிழ்த் தந்தை மறைமலை யடிகளாரின் மகனார், கொண்முடிபு ஞாயிறு பேரா. **மறை. திருநாவுக்கரசு** அவர்கள் தம் வாழ்த்துரையில், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், பாவாணர், பெருஞ்சித்திரனார் ஆகியோர் தமிழின மறுமலர்ச்சி யாளர்கள் என்று கூறியதுடன் ஆசிரியர் தம் தொண்டைத் தடை யுறாது செய்ய அவர்கட்குத் துணைவியாக வந்து வாய்த்த அவரின் இல்லக் கிழத்தியாரையும் பாராட்டிப் பேசினார்.

இவையனைத்திற்கும் பின்னர், திருவாட்டி **தாமரை பெருஞ் சித்திரனார்** அவர்களின் வெளியீட்டு நன்றியுரையும், கோட்டை **இராவணன்,** க. மு. அவர்களின் உணர்வு கெழுமிய விழா நன்றியுரையும் முடிவுநிலை யெய்தின.

வெளியீட்டு விழாவின் முடிவாகவும் முடியாகவும் தென்மொழி **ந. இளமாறன்** அவர்களால் 'தமிழின ஒருமைப் பாடல்' இசைக்கப் பெற்று விழா பெரு நிறைவெய்தியது.

இந்த விழா பல வகையிலும் சிறப்பு மிக்க ஒரு விழாவாகத் திகழ்ந்தது என்று கூறினால் அது மிகையாகாது. தமிழக வரலாற்றி லேயே நூல் வெளியீட்டைப் பொறுத்த அளவில் ஒரே தடவையில் நூலாசிரியர் ஒருவரின் மூன்று படைப்புகளை வெளியிட்டதும் அந்த நூல்கள் நிறைந்த அளவில் விலை போனதும் இந்த விழாவில்தான் என்று சொல்லலாம். மேலும் ஆரவாரம் மிகுந்த சென்னை நகரில் ஓர் இலக்கிய விழாவிற்கு மன்றம் நிறையுமளவில் பெருந்திரளான கற்றோர் கூட்டம் வந்ததும், மக்கள் சாய்கால் பெற்ற எந்த அரசியல் தலைவரும் இவ் விழாவில் பங்கேற்காமலிருந்தும், இது மிகவும் சிறப்பாகவும் நிறைவாகவும் நடைபெற்றதும், குறிப்பிடத் தக்க பெருமை வாய்ந்ததாகும். மொத்தத்தில் இவ் விழா மக்களிடை யில் ஓர் எதிர்கால விழிப்புணர்ச்சியையும் ஒரு பெருத்த நம்பிக்கை யையும் ஊட்டியதெனலாம்.

(நிகழ்ச்சிகள் முழுமையும் படங்களுடன் தனி நூலாக வெளி யிடப் பெறும்.)

—செய்தித் தொகுப்பு
**'அருளி—இராவணன்'**

## நன்கொடைகள்

1) திரு. ஆர். குப்புசாமி, c/o 56, A. P. O. அவர்கள், தம் மகன் **'சரவணத் தமிழன்'** முதலாண்டு பிறந்த நாள் நினைவாக 30-10-79 அன்று தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 4/- நன் கொடை அளித்தார். குழந்தை **சரவணத் தமிழன்**, பல்லாண்டு சிறப்புற்று வாழ, தென்மொழி இனிதே வாழ்த்துகிறது.

# முரட்டு மொழி

புலவர். பொன். முகிலன்

சமற்கிருதம் ஒரு முரட்டு மொழியாகும் அதனைக் கற்றோரும், காது கொடுத்துக் கேட்டோரும் இவ்வுண்மையை உணர்வர். ஆயின், சமற்கிருதப் பற்றுளரில் ஒரு சிலர் இக் கூற்றை ஒப்பாமல் இருக்கலாம்.

ஒப்பாமல் இருந்து விடலாமேயன்றி, முரட்டு மொழி அன்று என்றோ, அல்லது இதற்கு எதிராக மென்மொழியே என்றோ எவராலும் நிலைநாட்டிவிட முடியாது. ஏனெனில், முரட்டுத் தன்மைகளை அம்மொழி பெற்றிருப்பதால்தான் அதனை அறிஞர்கள் அவ்வாறு குறிக்கின்றனர்கள்—குறித்துள்ளார்கள். அதையே இங்கு நாம் எடுத்துரைக்கின்றோம்.

சமற்கிருதத்திற்கு 'முரட்டு மொழி' என்னும் பெயர் வைப்பு சமற்கிருதப் பற்றுளர்களால் கொடுக்கப்பட்டதேயாகும். 'வியாக்கியானம்' என்னும் சமற்கிருதப் பெயரால் நலாயிரப் பாசுரங்களுக்கு விரிவுரை செய்த பெரிய வாச்சான் பிள்ளை (இங்கு பிள்ளை என்பது குலப் பெயரன்று, அவரது இயற் பெயரே.) ஆண்டான், சீயர் ஆகியோரே இப்பெயரைச் சூட்டினர்கள்

நாலாயிரப் பாசுரங்களில் உள்ள 'திருமாலை' என்னும் பகுதிக்கு விரிவுரை கூறிய இடத்தில், அப்பகுதியின் 19-ஆம்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

2) திரு. து. கருப்புசாமி, c/o 56, A. P. O அவர்கள், தம் மகன் **'கார்த்திகேயன்'** முதலாண்டு பிறந்த நாள் நினைவாக 30-10-79 அன்று, தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 4/- நன்கொடை அளித்தார். **கார்த்திகேயன்** பல்லாண்டு சிறப்புற்று வாழ, தென்மொழி வாழ்த்துக் கூறுகிறது.

3) சேலம், அம்மாப்பேட்டை திரு. முத்து. அண்ணுமலை அவர்கள் தம் தங்கை செல்வி. **கண்ணம்மா**, செல்வன். **காமராசு** அவர்களுக்கு 2-11-79-ஆம் பக்கல் நடந்த திருமண அன்பளிப்பாக உருபா 10/- வரப்பெற்றோம். தமிழ்மணங் கமழத் தென்மொழி மணமக்களை வாழ்த்துகிறது.

4) சேலம், அத்தனூர் வழக்குரைஞர், திரு, கொ. பரமசிவம், தன் தங்கை தனலக்குமியின் குழந்தைக்கு, ஐயா அவர்கள் **'தென்றல்'** என்று பெயரிட்டமைக்காக 3-11-79 அன்று உருபா 25/- நன்கொடையாக அனுப்பியுள்ளார். தமிழ்த்தென்றல் பல்லாண்டு வாழ்ந்து சிறப்புற, தென்மொழி குழந்தையை வாழ்த்திக் கொள்கிறது.

பாடல் உரையில் திருமால் சமற்கிருத முரணர் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்,

அஃதாவது, 'வடதிசை பின்பு காட்டி. வடக்குத் திக்கு ஆரிய பூமி ஆகையினுலே **சமற்கிருத முரணராய்**, ஆழ்வார்கள் ஈரச் சொல் (குளிர் தமிழ்ச் சொல்) நடையாடாத தேசமாகையாலே, என்கிறுர்.

முதுகு திருமாலுக்கு வடதிசை நோக்கி இருப்பது ஏன் என்பதை விளக்க வந்த பெரியவாச்சான் பிள்ளை, வட திசையில் உள்ளவர்கள் தமிழைப் பாராட்டாதவர்கள், தமிழை அமிழ்தாக எண்ணுதவர்கள், ஆழ்வார்களின் பாசுரங்களைப் போற்றிப் பேணுத வர்கள், ஆகையினுல் திருமாலாகிய திருவரங்கர் சமற்கிருதத்திற்கு முரணுனவர் என்றும், அதனை வெளிக்காட்டவே—உணராதார்க்கு உணர்த்தவே வடக்குத் திசையாகிய சமற்கிருதம் வழங்கும் திசைக்கு முதுகை வைத்தார்.

சமற்கிருதத்தைப் போற்றுபவர்களுக்குத் தம் திருமுக மண்ட லத்தைக் காட்டி ஆட்கொள்ள விரும்பாது தமிழ் வழங்கும் தென் திசைக்குத் திருமுகத்தைக் காட்டியுள்ளார். இவ்வாறு அவர் விளக்கம் தருகிறுர்.

அடுத்து, சீயர் என்பார் பெரியவாச்சான்பிள்ளையின் விரிவுரை யில் உள்ள அருஞ் சொற்களை விளக்கியுள்ளார். அதில் திருவாய் மொழி 9-2 : 8-ஆம் பாடலின் விளக்கவுரையில் ஒரு மேற்கோள் காட்டுகிறுர்.

அஃதாவது, "அங்கே போயும் முரட்டு சமற்கிருதம் விட்டீ ரில்லையே, எங்கே இருந்தாலும் நாம், நாங்காணும், இது ஆண்டான் அருளிச் செய்தது" என்று கூறுகிறுர்.

இம் மேற்கோள் பகுதியில், ஆண்டான் என்பார், வங்கிபுரத்து நம்பியை நோக்கி 'நீர் முரட்டுச் சமற்கிருதம் விடவில்லையே' என்று இடித்துக் கூறுகிறுர்.

இதற்கு விளக்கம் கூறுகையில், 'வங்கிபுரத்து நம்பியே! நீர் போய் நின்றது திருமாலைச் சேவிக்க (வழிபட) ஆயின், சமற் கிருதத்தை விட்டீரில்லை, முரட்டுச் சமற்கிருதம் கொண்ட உமக்குப் பெருமாளுடைய கடாச்சம் (அருள்) எப்படிக் கிடைக்கும்? என்று விளக்கம் தருகிறுர் சீயர்.

இக் கூற்றுகளை நோக்குகையில் சயற்கிருதத்தைப் பெரிதும் கலந்து 'வியாக்கியானம்' என்னும் பெயரில் மணிப்பவள நடை யைப் புகுத்திய திருமாலிய (வைணவ) ஈட்டுரை ஆசிரியர்களே சமற்கிருதத்தை முரட்டு மொழி எனக் கூறியுள்ளதால், இது பகை கொண்டோ, பழிக்க வேண்டுமென்றோ கூறியதன்று. அம்மொழியின் உண்மையான இயல்பே முரட்டுத் தன்மை உடையதுதான்.

என்பதை மேற்குறித்த கூற்றுகள் தெள்ளத் தெளிவாய்க் காட்டு கின்றன.

மேலும், திருமால் சமற்கிருத முரணர் என்பதையும், சமற் கிருதத்தை விடாது பற்றுபவர்கள் பற்றற்ற இறைவனின் அருளைப் பெறமாட்டார்கள் என்பதையும் இவ்விரிவுரைகள் கல்மேல் எழுத்துப் போல் ஒல்லும் வகையில் உணர்த்துகின்றன.

நாலாயிரப் பாசுரங்களுக்கான ஈட்டுரை ஆருயிரப்படி யென்றும், பன்னீராயிரப் படியென்றும், இருபத்து நாலாயிரப் படியென்றும், முப்பத்திரண்டாயிரப் படியென்றும் பெருக்கிக் கொண்டே சென்றுள்ளது ஏன் என்று எண்ணிப் பாருங்கள்!

ஆயிரப் படி விளக்கத்தில் நிறைவு காணுமையால் பன்னீரா யிரப் படி படைக்கப்படுகிறது. அதுவும் நிறைவு தாராமையால் இருபத்து நாலாயிரப் படி எழுகிறது. இவ்வாறே முடிவின்றி விளக்கங்கள் நீண்டு கொண்டு செல்வது ஏன்?

**புரட்டுகள் அற்ற மென் தமிழோடு முரட்டுச் சமற் கிருதத்தைக் கலந்து கலப்புத் தமிழை விளக்கவுரைக்குப் பயன்படுத்திய தொன்றே ஆயிரங்கள் அடுக்கடுக்காய்ப் பெருகினுலும் அவ்வுரை நிறைவின்றிக் குறையுடையதா கின்றது.**

அதனுலேயே மீண்டும் மீண்டும் ஈட்டுரைகள் பெருகின என்னும் உண்மையைப் பிரித்தாய்ந்து உணர்க. கலப்புத் தமிழ், தமிழ் அன்று என்பதையும் அது தமிழர்க்குத் தெளிவை—நிறை வைத் தாராது என்பதையும் நிலைநாட்டத்தக்க அருஞ்சான்ருய் விளங்குகின்றன இந்த ஈட்டுரைகள். இதன் வரலாற்றை எண்ணி யேனும் கலப்புத் தமிழைக் கட்டோடு ஒழித்துத் தமிழாகிய தனித் தமிழைத்—தூய தமிழைப் பேணுக! போற்றுக! வளர்த்து வளம் பல பெறுக!

மேலும், சமற்கிருதத்தைத் தமிழிற் கலந்த சமற்கிருதப் பற்ருளர் களால்தான் அஃது இறைவனுக்கு முரண்பட்ட மொழி என்றும், முரட்டு மொழி என்றும் அதனை வழிபாட்டின் போது பயன்படுத்து பவர் இறைவன் அருளைப் பெறமாட்டார் என்றும், நாலாயிரப் பாசுர விளக்கவுரைகளில் உண்மை உள்ளபடியே உரைக்கப் பட்டுள்ளது.

இனியேனும் இதனை உளங்கொண்டு வரட்டுத் தனமிக்க முரட்டு மொழி கொண்டு வழிபாடாற்றும் வன்செயலை விடுத்திடுக! முன்னே தோன்றிய முதன் மொழியால், அன்னை மொழியால், மென்மை யெல்லாம் மிளிரும் தன்மை சான்ற தமிழ் மொழியால் வழிபாடு செய்க! இவ்வினிய இயற்கைத் தமிழாலே புலமும் நலமும் பெற்றுப் புதுமை வளங்களை விளைவித்திடுக! o

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

**2. 'எண்டோகிரைன்' அஃதாவது தூம்பற்ற சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகளால் உண்டாகும் அலித் தன்மை :**

'என்டோகிரைன்' சுரப்பிகள், தூம்பற்ற சுரப்பிகள் எனப் பெயரின. பிற சுரப்பிகளிலிருந்து சுரக்கப்படும் நீர்கள், அவற்றிற்கு ஏற்பட்ட தூம்புகளின் வழியாகச் சேர வேண்டிய இடங்களை அடைகின்றன 'என்டோகிரைன்' சுரப்பிகளிலிருந்து சுரக்கப்படும் நீர்களோ, நேரே குருதியிலோ, அல்லது நிண நீரிலோ கலக்கின்றன. ஆகவே அவை உள்ளே சுரக்கப்படும் நீர்கள் எனப் பெயர் பெறுகின்றன. ஏன் எனில் சுரக்கப்பட்ட நீர்கள், சுரக்கப்பட்ட நிலையிலேயே உடம்பிற்கு வெளியே செல்வதில்லை. இந்நீர்களில் கலந்துள்ள முதன்மையான பொருளுக்குக் 'கார்மோன்' எனப் பெயர். 'கார்மோனி'ன் தனித் தன்மை என்னவென்றால், அது சுரக்கப்பட்ட இடத்திற்கு வெகு தொலைவில் உள்ள ஓர் உறுப்பின் மேல் ஆட்சி செலுத்துகின்றது குருதியின் மூலமாக அவ்வுறுப்பை இந்தக் 'கார்மோன்' சென்றடைகிறது. உடம்பை நோய் நொடி இல்லாமல் வைத்துக் கொள்ளவும், இயல்பான வழியில் இயங்கச் செய்யவும் பல 'கார்மோன்'கள் வேண்டற்பாலன. கலவி வேலைகள் சில 'கார்மோன்'களின் கண்ணோட்டத்தினாலேயே நடைபெறுகின்றன. இவை சுரக்கப்படும் சுரப்பிகளில் கோளாறு ஏற்பட்டு, சுரக்கப்படும் இந்தக் கார்மோன்'களின் அளவு குறையுமாயின், பால் உணர்ச்சியும் ஆண்மையும் உறுதியாகக் குறைகின்றன. எடுத்துக் காட்டாக, 'பிட்யூட்டரி' சுரப்பியில் கோளாறு ஏற்பட்டால் அலித் தன்மை உண்டாகிறது அத்துடன், கைகால், முகம் ஆகிய உறுப்புகள் வீக்கமடைகின்றன. அல்லது உடல் முழுவதும் ஒரேயடியாக பெருவளர்ச்சி அடைகிறது. 'தைராயிடு' சுரப்பியில் கோளாறு ஏற்பட்டாலும் அலித்தன்மை உண்டாகிறது. அத்துடன் உடல் குருகிக்குள்ளமாய்ப் போய்விடுகிறது. வித்துகள் ஆண் கரு உயிர்களை உண்டாக்குவதுடன், அவற்றின் இடைக்கண்ணறைகளிலிருந்து ஒருவகைக் 'கார்மோனை'ச் சுரக்கின்றன. இந்தக் 'கார்மோன்'தான், ஆண், ஆணாக வளர்ச்சி அடைவதற்கும், ஆண்மை கிளர்ந்து எழுவதற்கும் காரணம். இந்தக் 'கார்மோனி'ன் அளவு குறைந்தால் மாந்தனின் ஆண்மை குறைகிறது. ஆண் என்பதற்குள்ள அடையாளங்கள் எல்லாம் குறைந்து காணப்படுகின்றன. பெண்மைத் தன்மை வந்தடைகின்றது. ஆண் பெண்ணாக மாறலாம். ஆகவே இவ்வகைக் 'கார்மோன்'களின் குறைவால் ஏற்படும்

அலித்தன்மைக்கு, எந்தக் 'கார்மோன்' எவ்வளவு குறைகிறதோ அந்த அளவு கார்மோன் கொடுத்தால், அலித்தன்மை நீங்கிவிட வேண்டுமன்றோ? இதையே மருத்துவர்களும் முயன்றனர். சிலருக்கு வியக்கத்தகு நன்மைகள் ஏற்பட்டன. சிலருக்கு எவ்வகைப்பயனும் ஏற்படவில்லை. சுரப்பிகளைப் பற்றிய நம் அறிவு இன்னும் முற்றுப் பெறவில்லை. அதனால்தான் இத்தோல்வி. சுரப்பிகளைப் பற்றி நம் அறிவு பெருகப் பெருக இத்தோல்வி மறையலாம்.

**3. நடு நரம்பு மண்டல நோய்களாலும் காயங்களாலும் உண்டாகும் அலித்தன்மை :**

பால் உணர்ச்சியை அடக்கி ஆளும் நடுவங்களில் நோயோ, காயங்களோ ஏற்பட்டால் அலித்தன்மை உண்டாகலாம். சிலவேளை களில் இந்நடுவங்கள், நோயாலோ அல்லது காயங்களாலோ, தூண்டப்பட்டுப் பால் உணர்ச்சி மிக மிக மிகுதி ஆவதுடன், எழுந்த ஆண் குறி, துவள்வதே இல்லை. பெரு மூளையில் சில இடங் களில், அல்லது 'இலம்பார்' பகுதியிலுள்ள முதுகுத் தண்டில், காயமோ அல்லது அழுத்தமோ ஏற்படின் ஆண்மை குறைகிறது, சில வேளைகளில் ஆண்மை அழிகிறது. அந்த நடுவங்களில் புடைப்போ, கட்டியோ அல்லது குருதித் தேக்கமோ ஏற்பட்டால் மேலே கூறிய கேடுகள் உண்டாகலாம். தூங்கு நோய், மூளைச் சவ்வுகளின் அழற்சி நோய், முதுகுத் தண்டில் அழற்சி நோய், போன்றவற்றாலும் ஆண்மை அழிவு ஏற்படலாம். பால் உணர்ச்சி நடுவங்களைத் தாக்கும் காரணங்களை அகற்றினால் அஃதாவது, புடைப்பு, கட்டி போன்றவற்றை அறுவை மூலம் அகற்றினால், அல்லது நோய்களுக்குத் தகுந்த மருத்துவம் செய்தால், ஆண்மை அழிவைத் தடுக்கலாம்.

**4. நோய்களாலும், நோய் நிலைகளாலும் ஏற்படும் அலித்தன்மை :**

நடு நரம்பு மண்டலத்தைத் தாக்காத சில நோய்களாலும் அலித் தன்மை உண்டாகலாம். இந்நோய்களால் நச்சுப் பொருள்கள் உண்டாகின்றன. இந்த நச்சுப் பொருள்கள் உடலைத் தாக்கி வலு இழக்கச் செய்கின்றன. வலுக் குறைவால் ஆண்மை குறைகிறது. அலித்தன்மை உண்டாகிறது. இந்நோயாளிகளுக்குத் தங்களுடைய அலித்தன்மையைப் பற்றிய உணர்வே இருக்காது. ஏன் எனில் அவர்கள் உடல் அவ்வளவு களைத்திருக்கும். இந்த உடல் களைப்பில் அலித்தன்மை நினைப்பே எழாது. இந்நோய்களில் முதன்மை யானவை, குருதிச்சோகை சிறுநீரகப் பிரித்தியின் அழற்சி, குருதிக் குழாய்கள் தடித்தல் நீரிழிவு போன்றவை. 'இன்புளுவென்சா' காய்ச்சல் சில வேளைகளில் ஆண்மைத் தன்மைக்கு மிக்க கெடுதல் விளைவிக்கலாம். அக்காய்ச்சலால் உண்டாகும் நஞ்சு பல, தூம்பற்ற

சுரப்பிகளையும், கலவி உறுப்புகளின் சில நரம்பு நடுவங்களையும் தாக்குகின்றது. கிரந்தி நோயால் அலித்தன்மை உண்டாகலாம். உண்டாகாமலும் இருக்கலாம். தாக்கப்பட்டவரைப் பொறுத்தது. ஆனால் கிரந்தி நோயால் குருதிக் குழாய்களிலும், ஆண் குறியில் உள்ள எழுச்சிப் பொருள்களிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படு கின்றன. இவ்வகை அலித்தன்மையை நீக்க வேண்டுமானால் நோய் களுக்குத் தகுந்த மருத்துவம் செய்ய வேண்டும்.

**5. கலவி உறுப்புகளில் உள்ள அல்லது ஏற்படும் கோளாறுகளால் உண்டாகும் அலித்தன்மை :**

இக்கோளாறுகளை முன் விளக்கிய பிறவியிலேயே ஏற்படும் கோளாறுகளுடன் குழப்பி மயங்குதல் கூடாது. கலவி உறுப்பு களில் ஏற்படும் தாக்குதல்களாலும் அழற்சிகளாலும். இந்த அலித் தன்மை உண்டாகிறது. இக்கோளாறுகளால் கலவி உறுப்புகளில் இயல்பாக இருக்க வேண்டிய தன்மைகளில் மாறுபாடு ஏற்படுவ தில்லை. ஆண் குறியில் உள்ள ஆண் குறி மேட்டில்தான் மாறுதல் ஏற்படுகிறது. ஆண் குறி மேடு என்பது இழையத்தால் ஆய சிறு மேடு. இம் மேடு சிறுநீர்ப்புற வழியின் பின் பகுதியில் நீட்டிக் கொண்டிருக்கிறது. இந்த இடம் சிறுநீர்ப்புற வழி சிறுநீர்ப் பைக்குள் திறக்கும் இடத்தை ஒட்டி இருக்கிறது. புணர்ச்சியில் உச்சநிலை அடையும் பொழுது ஒளிநீர், தள்ளு தூம்பிலிருந்து தள்ளப்பட்டு, இந்த மேட்டை அடைந்து, சிறுநீர்ப்புற வழியில் நுழைந்து, வெளியேறுகிறது. இம்மேடு எழுந்து நிற்கும் தன்மை உடையது. இதன் வேலை புணர்ச்சியின் போது, சிறுநீர்ப் பையில் உள்ள சிறுநீர் வரும் வழியை அடைப்பதுதான். அதனால் புணர்ச்சி யின்போது சிறுநீர்ப் பையிலிருந்து சிறுநீர், சிறுநீர்ப்புற வழியை அடைவதில்லை. அத்துடன் சிறுநீர்ப்புறவழி வழியாக ஒளிநீர் சிறுநீர்ப் பையை அடையாதபடி பார்த்துக் கொள்கிறது. சுருக்க மாக, புணர்ச்சியின்போது ஒளிநீரும் சிறுநீரும் கலந்து விடாதபடி பார்த்துக் கொள்கிறது. பால் உணர்ச்சியைத் தூண்டுவதிலும், அதைக் கட்டுப்படுத்துவதிலும் ஆண்குறியை எழுந்து நிற்கச் செய்வதிலும், இம்மேடு முதலிடத்தைப் பெறுகின்றது என மருத்து வர்கள் நினைத்த காலமும் உண்டு. இந்த மேடு அடிக்கடி அழற்சி யடைகிறது. இவ்வழற்சியே அலித்தன்மைக்குக் காரணம் என முன் மருத்துவர்கள் நினைத்தனர். ஒரு காலத்தில் ஆண்பால் உணர்ச்சிக் கோளாறுகளுக்கு இந்த உறுப்பில் ஏற்படும் மாற்றங் களே காரணம் என்றும், அக்கோளாறுகள் நீங்க மருத்துவம் செய்யின் தீமை நீங்கிவிடும் எனக் கருதினர். ஆண்குறி மேட்டில் ஏற்படும் அழற்சிக்கும். அலித்தன்மைக்கும் உள்ள தொடர்பு இன்னும் நன்கு ஆராயப்படவில்லை. ஆனால் ஒரு காலத்தில் நினைத்துக் கொண்டிருந்தார்களே அந்த அளவு முதன்மை இடம் அதற்குக் கிடைக்காது என்பது மட்டும் உறுதி. (தொடரும்)

நாட்டில் நல்லவை பரவ தென்மொழி கருத்துகளைத் தங்கு தடையின்றிப் பரப்புவதைத் தவிர வேறு வழியில்லை. பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் பலவற்றை மட்டுமின்றிக் கட்டுரைகள் பலவற்றையும் சிறுசிறு அறிக்கை வாயிலாக வெளியிடுதல் இன்றியமையாமை ஆகின்றது அவற்றை வெளியிடப் பாவலரேறு அவர்கள் ஒட்டுமொத்தமாகத் தென்மொழி அன்பர்களை அனுமதித்தல் வேண்டும். அன்பின், ....**கரிகாலன்**, சென்னை-5.

0:688: அன்பு நெஞ்சம்! அருளுடை உள்ளம்!
பண்பின் சொற்கலம்! பாகெனப் பைந்தமிழ்த்
தண்மன இருப்பிடம்! தறுகண் ஆண்மை!
பொன்மனப் பொதுச்சீர் பூந்தமிழ்த் தொண்டு!

பெரிது முடைய பெருஞ்சித் திரனாரே!
சிறுது கொடுப்பச் சில்லறை மனத்தைத்
திறந்தே உமிழ்ந்த தேன்தமிழ்ப் புலவரின்
பரந்த பெயரைப் பெரிதும் உடையோய்!

தனித்தமிழ்த் தொண்டு தான்பெருந் தொண்டாம்!
இனித்தமிழ்த் தொண்டோ இன்பம் எனக்கே
இனியென் உடல்பொருள் ஆவி அனைத்தும்
நனியென ஈந்தேன் என்றோய் வாழ்க!

ஆரியப் பார்ப்பான் அவன்தன் சரக்கைக்
காறி உமிழ்ந்தீர்! அவனடி வருடி
வீரியம் பேசும் வையா புரிகளை
வாரி இறைத்த விளக்கத் தமிழோய்!

பட்டம் பதவி பொருள்மிக வாசை
திட்ட மெல்லாம் தூக்கி எறிந்தோய்!
வட்டப் பாதையில் வியன்றமிழ்த் தொண்டு
திட்ட மொன்றே தேர்ந்தோய் வாழ்க!

சட்டப் படியே செந்தமிழ் நாட்டை
கட்டிப் பிடித்துக் கருத்துடன் உரிமை
எட்டிப் பிடித்து வடவரின் குடுமியைத்
தட்டிப் பறித்துத் தனிநா டமைப்போய்!

எங்கும் தமிழே எதிலும் தமிழே
தங்கிட உலகில் தங்கிட அமைதி
தங்கிடத் தந்திட தகுதிசேர் வகையைப்
பொங்கிடச் செய்வாய்! பொன்மனங் கொண்டோய்!!

—**இரா. வெற்றியழகன்**, க. மு. கல்வியூர், வ. ஆ.

தாக்கிப் பேசி விட்டுச் சென்று விடுகின்றனர். இன நலம் பற்றிப் பேசுவதற்கு இந்தத் தந்நல மிக்க வெட்கங்கெட்ட தமிழர்களுக்கு நேரமில்லை. பரமக்குடி முதுகுளத்தூர் போன்ற சிற்றூர்களில்கூட ஆர். எசு. எசு. பொதுக் கூட்டங்கள், வரலாறு காணாத அளவில் தமிழர்களைப் பயன்படுத்தியே, நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் தமிழர்கள் விழித்துக் கொள்ளவில்லையெனில் இருள் சூழ்ந்து விடும் என நினைக்கிறேன். என் போன்ற தமிழின அன்பர்களுக்கு நம்பிக்கை விண்மீனான தாங்கள் தமிழர்களை ஒன்றிணைத்து, ஆர். எசு. எசை. எதிர்த்து இயக்கம் நடத்த வேண்டுமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். எங்களால் முடிந்த உதவியினை என்றும் உங்களுக்குச் செய்ய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களால் முடிந்த உதவி, எங்கள் உயிர்! பார்ப்பன வல்லாண்மையை முடிவுக்குக் கொண்டுவர-தமிழினம் விழிப்படைய-உங்களது அறைகூவலை எதிர்பார்க்கிறோம். "வெட்கங் கெட்ட தமிழர்கள்!" விழிப்புறும் நாள் எந்நாளோ?

—**பா. தமிழ்மணி**, தல்லாக்குளம், மதுரை.

*0:683:* பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய ஐயா, வணக்கம். நான் சென்ற இதழையும் இவ்விதழையும் கண்ணுற்றேன். தங்களது அரசியல் விழிப்புணர்வை எளியேன் அறிந்தேன். தாங்கள் தமிழகத்தில் நல்லதோர் அரசியல் இயக்கத்தை உருவாக்குங்கள். முதலில் எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்த்து அ. தி. மு. க. வுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுங்கள். இற்றைய தமிழாசிரியர்களோ இது பற்றி வாளாவிருக்கின்றனர். தங்களது இயக்கத்தால் அரசுக்குக் கண்டனம் தெரிவியுங்கள். தமிழாசிரியர்களையும், பேராசிரியர்களையும் கூட்டி ஒரு முடிவு எடுத்து அரசுக்கு எதிராகச் செயல்படுங்கள். எங்களைப் போன்ற இளைஞர்கள் தங்கட்கு உறுதுணையாக வருகின்றோம். சிறந்ததோர் அரசியல் இயக்கத்தைத் தாங்கள் உருவாக்கினால்தான் தமிழ் வளரும்; தமிழ்நாடு உருப்படுவதுடன் தமிழினமும் சிறப்புறும். இல்லையேல் இற்றைய நிலையில் கேடு கெட்டழியும்.

—**சங்க. தமிழ்ச்செல்வன்**, திருக்குறுங்குடி, நெல்லை மா. வ.

*0:684:* தனித்தமிழ்ப் பண்பாட்டின் தலைமைக்காவல! தென்மொழி துலை இதழ் ஆசிரியவுரையினைப் படித்து உண்மைத் தமிழ், மெய்த்தமிழ், கற்றோரின் பண்புகள் இவையென அறிந்த யான், 14-11-79 அறிவன் அன்று மாலை, தென்மொழி இல்லத்தில் தங்களைக் கண்டு, அப்பண்புகளை நேர் காணும் பேறு பெற்றேன். ஆசிரியவுரையிலே கண்ட வரை படத்தை நேரிலே பார்த்துணர்ந்த செம்மாந்த நெஞ்ச ஒளியே இவ்வோலையாக மலர்ந்தது.

—**புலவர். ச. தமிழ்முருகு**, சைதாப்பேட்டை.

*0:685:* நாவலந் தண்பொழிலில் நந் தமிழை நாளும் பேணிக் காத்திடும் நற்றமிழ்க் காவல! தென்மொழிப் பாவல! வணக்கம். ஈண்டு, யான், என் உள்ளக் கிடக்கைகள் சிலவற்றைத் தெரிவித்திடப் பெரிதும் விரும்புகின்றேன்,

**Otaca Mund** என ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டு வந்த ஊரினை உதகமண்டலம் என அழைத்திட வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தது, அரசு. ஆயின், பலுக்கத் தெரியாத பரங்கியன்

பலுக்கியபடியே பைந்தமிழ்ப் பெயர்களான, தூத்துக்குடியை **Tuticorin** எனவும், மதுரையை **Madura** எனவும் தஞ்சாவூரை **Tanjore** எனவும் இன்னும் எத்தனையோ ஊர்களின் பெயர்களை ஆங்கிலப் பலுக்கல் படியேயும் நம்மவர்(!) கூறி வருகின்றனர். உயர்தனிச் செம்மொழியை மறந்து, ஆங்கிலத்தில் பேசி வருகின்றனர். அரசுத் துறைகளிலும் எழுதி வருகின்றனர். இதனை மாற்றிடத் தாங்கள்தாம் முயற்சியைத் தொடங்கல் வேண்டும். தென்மொழியில் வினா-விடைப் பகுதி தொடங்கப்படல் வேண்டும். அப்போதுதான் எம்போல்வாரின் ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வழி பிறக்கும். தென்மொழியினைக் கிழமை ஈரிதழாய் வெளியிட முயன்றால் மிகுந்த நலம் பயக்கும்-செந்தமிழ் அன்பர்க்கு! கருதிப் பார்த்திடக் கனிவுடன் வேண்டுகிறேன்:

—**வே. அரங்கசாமி** பொறி. இ. காங்கேயம்.

*0:686:* அன்புடையீர், எனது பணிவான வணக்கம்; நான் பர்மிய நாட்டில் வாழும் ஒரு தமிழ்ச்சிட்டு. தங்களது இலக்கிய இதழ்களான தமிழ்ச்சிட்டு, தென்மொழி ஆகிய தமிழ் இலக்கியச் சுவடிகளைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆனால் இதுவரை யான் படித்தது மூன்று இதழ்கள் மட்டுமே. அழகிய செந்தமிழில் இனிதாய்த் தாங்கள் இயற்றும் பாடல்கள் என் உள்ளத்தில் இடம்பெற்று விட்டன.

தமிழ் இலக்கியத்தில் நிறைய இன்பம் காணத் துடிக்கும் எனக்குத் தங்களின் இதழ்கள்-என்னைத் தமிழ்த் தாயின் அன்பு மடியில் கிடத்தி விடுகின்றன. தங்கள் எழுத்துகளைப் படித்தேன். பலமுறை படித்தேன். அதில் காணும் கருத்துக் களஞ்சியங்கள், தேனினும் இனிதாய்த் தெவிட்டாத தெள்ளமுதாய் இருக்கின்றன. என் கைகள் குவிந்த அன்பு வணக்கங்கள் ஆயிரமாயிரம். தங்கள் மென் பாதங்களைத் தொடுகின்றேன். அடியேனை அழகிய தமிழால் காத்தருள வேண்டுகிறேன்.

—**சோலை வளவன்**, இரங்கூன், பர்மா.

*0:687:* அன்புடையீர், உண்மைத் தமிழ் குறித்த உங்கள் ஆய்வுக் கட்டுரை அறிவுக்கு ஒரு நல்விருந்து. தென்மொழிக் கருத்துகளைப் பரப்புவதற்கு நகரில் மாதந்தோறும் ஒரு கூட்டம் நடத்த, ஏற்பாடு செய்யலாமே. அரிமா, சுழற் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள், கூட்டம் நடத்துவது போல் ஆரவாரம் இன்றிப் பொதுவான ஓரிடத்தைப் பிடித்துச் சிறந்த பற்றாளர்களை அழைத்துச் சிக்கனமான முறையில் கூட்டம் நடத்தலாமே. இது குறித்துத் தென்மொழி மறவர்களின் கருத்தறிந்து செயல்படலாமே.

அடுத்து, தென்மொழி, தமிழ்ச்சிட்டுக் கருத்துகளை, பாக்களைச் சிறு அறிக்கைகளாக வெளியிட ஒவ்வொரு முறையும் பொறுப்பாசிரியர் ஒப்புதல் பெற வேண்டுமா? (40-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை - 600005 (தமிழகம்)